விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ்

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 03 வெள்ளிக்கிழமை (19.09.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 274

## மூன்று பெண்களைக் கடித்த பசுமாடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் குமாரபுரம், கணுக்கேணி பகுதிகளில் கடந்த மூன்று நாட்களாக பசுமாடு ஒன்று கடித்ததில் மூவர் மாஞ்சோலை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர். ஒருவர் விடுதியில் சேர்க்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார். இந்தப் பசு

20ஆம் பக்கம் பார்க்க....

**உள்ளே...**

ஜோதிட கலாமணி சிவல்புரி சிங்காரம் எழுதும் புரட்டாதி மாதப் பலன்கள் உள்ளே.



மேஷம் ரிஷபம்

# நியதிச் சட்ட மூலம் ஆளுநரால் ஏற்பு

(கொழும்பு)

*வட மாகாண சபையால் உருவாக்கப்பட்ட நிதி நியதிச் சட்டம் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியால் அங்கீகரிக்கப்பட்டு நேற்று தங்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக வட மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார். அதனுடன் ஏற்கெனவே ஏற்றுக் கொள்வதாக உறுதியளித்த முத்திரைவரி கைமாற்றல் நியதிச் சட்டமும் கையளிக்கப்பட்டதாக அவைத்தலைவர் குறிப்பிட்டார்.*

20ஆம் பக்கம் பார்க்க....

## ஜொனி மிதிவெடி நேற்று மீட்பு



(வவுனியா)

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் 12 மிதிவெடிகள் விசேட அதிரடிப் படையினரால் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

ஓமந்தையில் உள்ள கருங்காலிக் குளம் பகுதியில் இருந்தே இந்த மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

20ஆம் பக்கம் பார்க்க....

# இராணுவம் வசமிருந்த காணிகள் கையளிப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, கரைத்துறைப் பற்று, கேப்பாப்பிலவு பகுதிகளில் இராணுவம் மற்றும் விமானப்படை வசமிருந்த 642 ஏக்கர் விவசாய நிலங்கள், நேற்று வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாக விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட இராணுவ கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் என்.ஏ.ஜே.சி.டயஸ், முல்லைத்தீவு, வாவட்டி குளப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் நாகலிங்கம் வேதநாய

20ஆம் பக்கம் பார்க்க....

# பா.ஜ.க பங்கேற்பது மன்னிக்க முடியாது

(சென்னை)

இலங்கையில் நடைபெறும் ஆசிய அரசியல் கட்சிகள் மாநாட்டில், பா.ஜ.க. பங்கேற்பது மன்னிக்க முடியாத துரோகச்செயல் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

மனித குல வரலாற்றில் மிகக் கொடூரமாக நடைபெற்ற பேரழிவுகளுள் ஒன்றாக இலங்கைத் தீவில் இராணுவத்தை ஏவியும், உலகம் தடை செய்த நாசகாரக் குண்டுகளை வீசியும் லட்சக்கணக்கான ஈழத் தமிழர்களை ஈவு இரக்கம் இன்றிப் படுகொலை செய்த இலங்கை ஆட்சியாளர்கள் அனைத்துலக நீதிமன்றத்தின் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டியவர்கள்.

இலங்கையின் அழைப்பை ஏற்று, ஆசிய நாடுகளின் அரசியல் கட்சிகள் மாநாட்டில், பா.ஜ.க. பங்கேற்பது, தாய்த் தமிழகத்திலும், ஈழத்திலும், உலகெங்கும் உள்ள தமிழர்களின் நெஞ்சில் ஈட்டி பாய்ச்சுகின்ற அக்கிரமம் ஆகும்.

ஈழத்தமிழர் படுகொலைக்கு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, இராணுவ உதவிகள் செய்து துரோகம் இழைத்தது.

பொது நலவாய நாடுகளின் மாநாடு கொழும்பில் நடந்த போது, அதில் இந்தியா பங்கேற்கக் கூடாது

20ஆம் பக்கம் பார்க்க....

## பிரச்சினை தீர்க்கப்படாமைக்கு சர்வதேச நாடுகளே பொறுப்பு

இலங்கை உட்பட்ட சில நாடுகளில் உள்ள பிரச்சினைகள் தீர்க்கப்படாமைக்கு சர்வதேச சமூகமே பொறுப்பாகும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது

ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகளின் 27வது அமர்வில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அமெரிக்கா இதனை குறிப்பிட்டுள்ளது.

இலங்கை உட்பட்ட சில நாடுகளில் உரிய செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தால் பல உயிர்களை காப்பாற்றியிருக்க முடியும் என்றும் அமெரிக்கா இதன்போது தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்முறைகளை தடுத்திருக்க முடியும் என்று குறிப்பிட்ட அமெரிக்கா, ருவண்டா, டார்பூர், சிரியா போன்ற நாடுகளிலும் இதே நிலையை காணக்கூடியதாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

ஐ.நா செயலாளர் பான்கீமூனும் மனித உரிமை மீறல்களை தடுக்க முன்கூட்டியே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்று அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது. (எ-11)

## சீன வர்த்தகர்கள் இருவர் கைதாகினர்

(கொழும்பு)

பெருந்தொகையான வல்லப்பட்டையை தனது பயண பொதியில மறைத்து சீனாவுக்கு எடுத்துச் செல்ல முயற்சித்த இரண்டு சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன் பெறுமதி இரண்டு கோடி 80 லட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக சுங்க திணைக்களத்தின் பேசசாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

20ஆம் பக்கம் பார்க்க....

# கிளாலியில் 21 ஷெல்கள் மீட்பு!



கிளாலி முதலியார்தோட்டப் பகுதியில் உள்ள தனியார் காணியிலுள்ள கிணற்றுக்குள் இருந்து 21 ஷெல்கள் மீட்கப்பட்டதாக பளைப் பொலிஸார் தெரிவித்தனர். 60 மிமீ மோட்டார் குண்டுகள் - 16, 81 மிமீ மோட்டார் குண்டுகள் 04, ஆர்.பி.ஜி. குண்டு - 1 உள்ளடங்கலாக 21 ஷெலகளை நேற்று வியாழக்கிழமை

20ஆம் பக்கம் பார்க்க....

## மாபெரும் போராட்டத்துக்கு பல்கலை மாணவர்கள் முடிவு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அனைத்துப் பல்லைக்கழக மாணவர்கள் போராட்டம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுறது.

வெளிநாட்டு மாணவர்களுக்கு கல்வியை விற்கின்றமை மற்றும் மாணவர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை கண்டித்தே நாடளாவிய ரீதியில் அனைத்து பல்கலைக்கழக மாணவர்களையும் ஒன்றிணைத்து பாரிய போராட்டத்தை முன்னெடுக்க உள்ளதாக அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இலவச கல்வியை எதிர்கால சமூகத்திற்கு கிடைக்க விடாமல் அரசினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பில் வீடு வீடாக சென்று மக்களை தெளிவுப்படுத்த உள்ளதாகவும் தெரிவித்தது.

20 பக்கம் பார்க்க....

# தென்னாபிரிக்க உப ஜனாதிபதியுடன் அமைச்சர் பசில் திடீர்ச் சந்திப்பு!



(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் தென்னாபிரிக்க உப ஜனாதிபதி சிறில் ரமபோசா இடையில் சந்திப்பொன்று நடந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

ஊவா மாகாண சபைத் தேர்தல் இறுதியாகி வரும் சந்தர்ப்பத்தில்

20ஆம் பக்கம் பார்க்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ராஜினி திரணகம நினைவு ஊர்வலம் நடத்த பொலிஸ் அனுமதி மறுப்பு

1989 இல் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்ட மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் ராஜினி திரணகமவின் 25 ஆவது ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி நாளை மறுதினம் சனிக்கிழமையும் அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமையும் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சிகளில் சில மாற்றங்கள் இடம்பெற்றிருப்பதாக நிகழ்ச்சி ஏற்பட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட அரங்கில் காலை 9.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை நடைபெறவிருந்த ராஜினி திரணகம ஞாபகார்த்த கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் யாழ். மத்திய கல்லூரி மைதானம் மற்றும் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் உள்ள இல.9, வேம்படி வீதியில் உள்ள யாழ். றிம்மர் மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 2 மணி முதல மாலை 4 மணி வரை யாழ். திருநெல்வேலி சந்தியிலிருந்து, ஆரியகுளம் வழியாக, வீரசிங்கம் மண்டபம் வரை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த - ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுடன் இணைந்து சமாதானம், ஜனநாயகம், ஒத்துழைப்பு என்பவற்றை முன்னிறுத்தி ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த - ஊர்வலம், பொலிஸ் அனுமதி மறுக்கப்பட்டிருப்பதால் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

எனினும், அன்று முற்பகல் முதல் யாழ். றிம்மர் மண்டப நினைவு தின நிகழ்வில் பங்குபற்றியோர் அன்று பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் வீரசிங்கம் மண்டபத்தில் ஒன்று திரண்டு நினைவு தின கலாசார நிகழ்வுகள் மற்றும் நினைவேந்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை "நீதியும், ஜனநாயகமும் மிகுந்த சமூகம்" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கு நிகழ்வு அந்த இடத்திற்குப் பதிலாக யாழ். பொது நூலக கேட்போர் கூடத்துக்கு இடம்மாற்றப்பட்டுள்ளது.

ராஜினி திரணகம நினைவு தினக்குழுவின கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்ட காரணங்களால் இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என நினைவு தினக்குழு அறிவித்துள்ளது. (எ-11)

# சீ பிளேன் விபத்து

மட்டக்களப்பு நகரின் வாவிப் பகுதியில் உல்லாசப் பிரயாணிகளை ஏற்றிவந்த சீ பிளேன் நேற்று பிற்பகல் விபத்துக்குள்ளானது.

வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு வந்த சீ பிளேனே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

வாவியில் உள்ள கற்பாறையில் சிக்குண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதன் போது அதில் பயணம் செய்த உல்லாசப் பிரயாணிகள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உல்லாசப் பிரயாணிகள் வருகை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# ஜனாதிபதி தேர்தலின் போது பொது வேட்பாளருக்கு ஆதரவில்லை

## ஜே.வி.பி அறிவித்துள்ளது

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில், பொது வேட்பாளராக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க போட்டியிட்டாலோ அல்லது ஜனநாயக கட்சியின் தலைவரான முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா போட்டியிட்டாலோ ஆதரவளிக்கமாட்டோம் என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மல்வத்த பீடத்தின் மஹாநாயக்க வண. திப்படுவாவே ஸ்ரீ சுமங்கள தேரரை சந்தித்து நேற்று வியாழக்கிழமை ஆசி பெற்றுக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் கருத்து தெரிவிக்கையில்,

ஐ.தே.கவின் குழுவாதம் காரணமாக பொது அபேட்சகர் என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்க உடன் கைக்கோர்க்க முடியாதுள்ளது.

1947 ஆம் ஆண்டு முதல் இன்று வரை மாறி மாறி ஆட்சியமைக்கப்பட்டதால் கிடைத்த பயன் ஒன்றுமில்லை. அடுத்துவரும் இரண்டு வருடங்களும் மிகப் பயங்கரமானதாக உள்ளது. தற்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் நாடாளுமன்றத்தில் உள்ளது. அதே நேரம் மாகாண சபைகள் என்றும் உள்ளூராட்சி மன்றங்கள் என்றும் பல்பக்க பலத்தை அரசு தனது கையில் வைத்துள்ளது.

அதனை விட சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் எவ்வாறான சூழலில் ஜனாதிபதித் தேர்தல் நடந்தாலும் அது மிகப் பயங்கரமானதாக இருக்கும்.

2017ஆம் ஆண்டுதான் ஜனாதிபதித் தேர்தல் நடக்க வேண்டும். அப்படி இருக்க அதற்கு முன் அவசரப்படுவதில் இருந்தே அதன் தன்மையை நாம் புரிந்து கொள்ள முடியும்.

எதிரணியின் பொது வேட்பாளராக பெரும்பாலும் ரணில் விக்ரமசிங்க வர முடியும். ஐ.தே.கவில் இன்று குழுவாதம் தலை தூக்கி உள்ளது. இதனால் அவர்களை ஆதரிப்பதில் பயன் இருக்காது.

தற்போதைய அரசை மாற்றுவது எமது நீண்ட பிரச்சினைக்குத் தீர்வாகாது. மேடைகளில் அரசியல் தலைவர்கள் கைக்கோர்த்து நிற்பதனால் எதுவும் நடக்காது. இதற்கு முன்னரும் இதுநடந்தது.

நீதி. சட்டவாக்கம் ஏ்ன்ற இரண்டு துறைகளையும் மற்றொருதுறையான நிர்வாகம் என்ற ஜனாதிபதி முறை விழுங்கிய நிலையில் எதுவித நியாயத்தையும் எதிர்பார்க்க முடியாது. எனவே, இந்த அடிப்படைப் பிரச்சினை தீர்க்கப்படுவதுடன் பொருளாதாரப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும்.

நாட்டில் ஒரு சிலர் மட்டும் பாரிய செல்வத்துக்கு அதிபதியாக இருந்து கொண்டு 98 சதவீதமான பொது மக்கள் வறுமையில் வாடும் பொது சகல அதிகாரங்களையும் ஓரிடத்தில் குவிய வ்வைத்து நியாயத்தை எதிர்பார்ப்பதென்பது அல்லது ஆட்சி மாற்றம் என்பது தீர்வைதராது. மாறாக எதிர்காலம் மிகப் பயங்கர நிலையை மட்டுமே தோற்றுவிக்கும் என்றார். (எ-11)

# புகையிரத கடவைக்கு முன் இணுவிலில் ஆர்ப்பாட்டம்

இணுவில் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் உள்ள புகையிரதக் கடவையை மூடி புகையிரதப் பாதை அமைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையை கண்டித்து நேற்று வியாழக்கிழமை பொது மக்கள ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

புகையிரதப் பாதை பணிகளை மேற்கொள்ள விடாது பாதையில் அமர்ந்து மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டார்கள்.

புகையிரதப் பாதை அமைப்பதற்கு முன்னர் குறிப்பிட்ட பாதையின வீதிக் கடவைக் குறியீடுகள் அமைக்கப்பட்டு அது சம்பந்தமான அடையாளங்களும் இடப்பட்டிருந்தன.

தற்போது திடீரென குறிப்பிட்ட வீதிக் கடவை அடையாளங்களை அகற்றியதுடன் இந்த வீதிக் கடவையை இல்லாது செய்து புகையிரதப் பாதை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவிருந்தது.

இந் நிலையில் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் பலரும் புகையிரதப் பாதையில் அமர்ந்து தொடர்ந்து பணிகளை செய்யவிடாது தடை செய்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது தமக்கு குறிப்பிட்ட வீதிக் கடவையை அமைத்து தரவேண்டும் என வலியுறுத்தி உள்ளார்கள்.

குறிப்பிட்ட இடத்திற்கு சென்ற வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ பொது மக்கள் மற்றும் புகையிரதப் பாதை அமைபபதற்கு பொறுப்பான அலுவலர்களுடன் கலந்துரையாடினார்.

அத்துடன் இந்திய உயர் ஸ்தானிகராலயத்துடன் இதுசம்பந்தமாக கலந்துரையாடி குறிப்பிட்ட புகையிரதக் கடவையை அமைக்கும் படியும வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

# பறிமுதல் செய்யப்பட்ட வலைகள் எரிப்பு

(யாழ்ப்பாணம்)

பாசையூர், குருநகர் போன்ற இடங்களில் மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட தங்கூசி வலைகளை கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தினால் எரித்து அழிக்கப்பட்டுள்ளன.

தங்கூசி வலைகளினை பயன்படுத்திய மீன்பிடித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதொன்றாகும்.

ஆகவே இவ்வாறு தங்கூசி வலைகளினை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுதல் சட்டவிரோத நடவடிக்கையாகும்.

இதனையும் மீறி இவ்வலையினை பயன்படுத்தி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்களிடமிருந்து இவ்வலைகளினை பறிமுதல் செய்து எரித்து அழிப்பது வழமையாகும்.

இதேபோன்று நேற்றைய தினமும் நான்கு தங்கூசி வலைகள் யாழ்.கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தில் வைத்து எரித்து அழிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதனை மீனவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென யாழ். கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார். (எ-4)


நிரந்தர வேலைவாய்ப்பு

உங்கள் எதிர்கால வாழ்விற்கு நிரந்தர வேலைவாய்ப்பினை பெற இன்றே தொடர்பு கொள்ளுங்கள். கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/ டொபி/ பால்மா/ கோடியல்/ பிஸ்கட்/ டிபிடிபி/ கிளவுஸ்/ யோகெட் /நூடில்ஸ் மாபிள்/ PVC....போன்ற பல தொழிற்சாலைகளில் உற்பத்தி/ லேபல்/பொதியிடல்/ களஞ்சிய பிரிவுகளுக்கு 17 - 50 வயது ஆண். பெண் தேவை சம்பளம் 18000/= 25000/= 38000/= (தொழில் அடிப்படையில்) உணவு தங்குமிடம் வசதிகள் குறைந்த விலைகளில். வருகை தரும் அன்றே வேலை.

தொடர்புகளுக்கு - 0776838231 0771116770

கேள்வி மனுக்கோரல்

யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் (ATI) சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கான கேள்வி மனுக்கோரல் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவ் விண்ணப்பங்களை பின் வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளமுடியும்.

- பணிப்பாளர்

ATI, இல. 665/2,
கடற்கரை வீதி, குருநகர்.

தொலைபேசி இல. : 021 222 9803 (7626)

A\L பரீட்சையின் பின்...



இந்தப் பேனாவினால் வாழ்க்கையை புதிதாக எழுதுங்கள்.

எமது குடும்ப அங்கத்தவர்களாக நீங்களும் இணையுங்கள்.

பாடசாலைக் கல்வியை முடித்துக் கொள்ளும் நீங்கள் தற்போது வாழ்க்கைக்கு புதிதாக முகம் கொடுக்கத் தயார். உங்களிடமுள்ள இளம் சக்தி சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கும் இலக்குகளை வெற்றி கொள்வதற்கும் உங்களுக்கு வலிமை தருகின்றது.

எமது நிறுவனத்தில் இணைந்து வாழ்க்கையை புதிதாக எழுதுவதற்கு இதோ உங்களுக்கு அரியதோர் சந்தர்ப்பம். சர்வதேச நிறுவனம் ஒன்றில் அங்கத்தவர் ஆகும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்துள்ளது. (7625)

தொடர்பு : T.P. 0777121868

கடை வாடகைக்கு

பருத்தித்துறை பஸ் நிலையத்திற்கு அருகில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-0774366704 (சி-8524)

வாடகைக்கு/ விற்பனைக்கு

பொருள்களை விநியோகம் செய்யக் கூடிய Full. Body வாகனம் நாளாந்த வாடகைக்கு/ விற்பனைக்குண்டு. (7627)

தொடர்பு: 0776237956

A/L பரீட்சைகளின் பின் தகவல் தொழினுட்ப கல்விக்கு அதிகம் ஏன் செலவிட வேண்டும் ?

Mega ஸ்கொலர்ஷிப் you can Win 75%

ஸ்கொலர்ஷிப் பரீட்சை

O/L , A/L பரீட்சை முடித்த மாணவர்கள், கொம்ப்யூட்டர் கல்வியில் ஆர்வமுடையவர்கள் மற்றும் 15 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் மெகா இலவச பரீட்சையில் பங்குபற்றலாம்.

செப்டெம்பர் 21st ஞாயிறு

CSC - ASIAN COMPUTER EDUCATION

இலவச பரீட்சை அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளுங்கள்

புதிய பிரிவுகளுக்கான நேரடி பதிவுகள் தற்பொழுது ஆரம்பம்

CSC - ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

யாழ்ப்பாணம்
2G ஸ்ரான்லி வீதி,
021 2225677


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம்- 5 பரீட்சை முடிபுகள் இம்மாத இறுதியில்

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் இம்மாத இறுதிக்குள் வெளியிடப்பட வுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்தார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் நாடளாவிய ரீதியில் 2 ஆயிரத்து 870 மத்திய நிலையங்களில் 3 இலட்சத்து 35 ஆயிரத்து 585 மாணவர்கள் தோற்றியிருந்தனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ

## பேரா.சிவலிங்கராஜாவின் யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும்

### நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவின் ''யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும்'' நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையினை குழந்தை ம. சண்முகலிங்கமும் வெளியீட்டுரையினை யாழ். பல்கலையின் சமூகவியற்றுறை தலைவரும் முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் நா. சண்முகலிங்கனும் நயப்புரையினை வலம்புரி பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரமும் ஆற்றவுள்ளனர். (இ

## மொழிப்பாகுபாடு

(கொழும்பு)


நுவரெலியா மாவட்டத்தில் தமிழ்மொழி பேசுகின்ற மக்கள் இரண்டாவது பெரும்பான்மையாக வாழ்கின்றபோதும், நுவரெலியா நகரத்தில் பொருத்தப்பட்டுள்ள வீதி பெயர்ப்பலகைகளில் தமிழ்மொழி மூன்றாம் இடத்திலேயே இருக்கின்றது.

இதேவேளை, தமிழ்மொழி பேசுகின்ற மக்கள் செறிந்து வாழ்கின்ற யாழ்ப்பாணத்தில் உள்ள வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள பெயர்ப்பலகைகளில் தமிழ்மொழியில் முதலிடத்திலும், கொழும்பு உள்ளிட்ட ஏனைய மாவட்டங்களில் பொருத்தப்பட்டுள்ள வீதி பெயர்ப்பலகைகளில் தமிழ்மொழி இரண்டாம் இடத்திலும் இருக்கின்றது.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு பிரதியமைச்சராக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பி.திகாம்பரம் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராவார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# அளுத்கம வன்முறைக்கு ஜனாதிபதி அனுதாபம் கூட தெரிவிக்கவில்லை

### மனம் வெதும்புகிறார் ஹக்கீம்



பேருவளையிலும், அளுத்கமவிலும் ஏற்பட்டது தனியே இருவருக்கிடையிலான சிறிய தகராறு என்று அண்மையில் நடந்த ஒரு நிகழ்வில் ஜனாதிபதி கூறியிருந்தார்.

அதனைப் பெரும்இனவாத வன்செயலாகக்காட்ட எத்தணிக்கப்படுவதாகவும் அதில் அவர் குறிப்பிட்டிருந்தார். குறைந்த பட்சம் நடந்து முடிந்த துயரமான அந்தச் சம்பவத்தையிட்டு ஜனாதிபதி அனுதாபமாவது தெரிவித்தாரா? இது வரையும் ஜனாதிபதி அதுபற்றி கவலை தெரிவிக்கக் கூட முன்வரவில்லை என நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை இரவு பதுளை நகரில் ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஜனநாயக ஐக்கிய முன்னணியின் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

இதற்கு முந்திய தேர்தல்களிலும் அரசாங்கக் கட்சியோடு இணைந்து போட்டியிடுமாறு ஜனாதிபதி எங்களை எச்சரித்துக் கூறியிருந்த போதிலும், நாங்கள் எங்களது கட்சியிலேயே போட்டியிடுகின்றோம். இது நாங்கள் நேற்று, இன்று ஆரம்பித்த வேலையல்ல. இவ்வளவு காலமும் அரசாங்கத்தோடு வெற்றிலைச் சின்னத்தில் தொடர்ந்தும் போட்டியிட்டு வந்த அமைச்சர் ரிசாட் பதியுதீனை நாங்கள் வெளியில் கொண்டு வந்து போட்டியிட வைத்திருக்கிறோம்.

ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்காக எனது அமைச்சுப் பதவிகளை இருமுறை துறந்து நான் தேர்தல்களில் போட்டியிட்டேன். அவ்வாறான தியாகத்தை ஐக்கிய தேசியக் கட்சிக்காக நான் செய்தேன். இந்நாட்டின் அண்மைக்கால வரலாற்றில் மட்டுமல்லாது, நாட்டின் முழு அரசியல் வர லாற்றிலுமே அமைச்சர் ஒருவர் இரண்டு முறை அரசாங்கத்தை விட்டு விலகி வந்து, ஆட்சி மாற்றம் ஒன்றை கொண்டுவருவதற்கு பாடுபட்ட சம்பவம் நிகழ்ந்ததில்லை. ஒருமுறை புதிய அரசாங்கத்தையே ஏற்படுத்தினேன்.

அடுத்து கிழக்கு மாகாண சபையை கைப்பற்றுவதற்காக அவ்வாறு செய்தேன். ஒரு புறத்தில் மத்திய அரசாங்கத்தையும மறுபுறம் கிழக்கு மாகாண ஆட்சியும் ஏற்படுத்துவதற்காக அமைச்சர் பதவியையும், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் துறந்து வந்து போராடினேன். இவ்வாறான தியாகத்தைச் செய்த என்னைப் பற்றித் தான் இப்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியினர் தூற்றித் திரிகின்றார்கள்.

ஜனாதிபதியின் சில செயற்பாடுகளைப் பற்றி நான் எப்பொழுதுமே கண்டித்துப் பேசி வருகிறேன். மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப் நினைவாக அவரது குடும்பத்தினர் ஆரம்பித்த நிலையத்தைத் திறந்து வைக்க அண்மையில் ஜனாதிபதி வருகை தந்து உரையாற்றிய போது, பேருவளையிலும் அளுத்கமையிலும் ஏற்பட்டது தனிநபர் இருவருக்கிடையிலான சிறிய தகராறு என்று கூறியிருக்கிறார். அதனை பெரும் இனவாத வன்செயலாகக் காட்ட எத்தணிக்கப்படுவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

குறைந்த பட்சம் நடந்து முடிந்த துக்ககரமான அந்தச் சம்பவத்தையிட்டு ஜனாதிபதி அனுதாபமாவது தெரிவித்தாரா?. இதுவரையும் ஜனாதிபதி அது பற்றி கவலை தெரிவிக்கக் கூட முன்வரவில்லை என்பதை மிகவும் கவலையோடு கூறுகின்றேன். இதனால் தான் முஸ்லிம்கள் கொதிப்படைந்திருக்கின்றார்கள். ஆட்சித் தலைமையின் இவ்வாறான மனப்போக்கில் மாற்றம் வரவேண்டும் என்று முஸ்லிம் மக்கள் விரும்புகின்றார்கள்.

இவ்வாறான காரியங்களால் எங்களுக்கேற்பட்ட மனவேதனையின் வெளிப்பாடாகத் தான் அமைச்சர்களான நாங்கள் இருவரும் ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஒன்றுபட்டு, பலமான ஒரு குழுவாக தனித்து போட்டியிடுகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ)

## பனங்கொட்டை விழுங்கிய யானைக் குட்டி உயிரிழப்பு

(கொழும்பு)

பனம்பழமொன்றை விழுங்கிய யானைக் குட்டியொன்று இறந்த சம்பவமொன்று அம்பாறை, திருக்கோவில், தாண்டிக்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த யானைக்குட்டி விழுங்கிய பனம் பழத்திலுள்ள கொட்டை, அதன் தொண்டையில் இறுகியதை அடுத்தே அந்த யானைக்குட்டி இறந்தது என அம்பாறை வனவிலங்குகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த யானைக்குட்டி, தாண்டிக்குளம் வாவிக்கு அருகிலிருந்து மீட்கப்பட்டது. இதற்கு உரிய சிகிச்சைகள் அளிக்கப்பட்ட போதிலும் அவை பயனற்ற நிலையில் அது இறந்ததாக வனவிலங்குகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (இ)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/ கொற்றாவ த்தை அ.மி.த.க. பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் பாட சாலைக்கேட்போர்கூடத்தில் நாளை மறுதி னம் ஞாயிற்றுக்கி ழமை மாலை 6 மணி க்கு பழைய மாண வர் சங்கத் தலைவர் உ.ரகுபதி தலைமை யில் நடைபெறவுள்ளது. (இ

## இராசி பலன்

19.09.2014
புரட்டாதி 03, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 4.43 மணிவரை
புனர்பூசம் காலை 6.46 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை
சுபநேரம் 6.03-7.33 மணிவரை
ஏகாதசி விரதம்

வளவன்

**மேடம்:** சிந்தனை ஆற்றலால் சிறப் படைவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கல்விக்காக எடுத்த முயற்சிகள் கைகூடும், தாய்வழி உறவில் அனுகூலமுண்டு.

**இடபம்:** உடல் நலனில் கொஞ்சம் அக்கறை தேவை, தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், உடன் பிறப்புக்கள் உள்ளம் மகிழும் செய்தி ஒன்றை கொண்டு வருவர்.

**மிதுனம்:** நாவன்மையால் நற்பெயர் கிடைக்கும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும், தொழிலில் உயரதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கடகம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், வெளியூர் பயணமொன்றால் கையிருப்பு கரையலாம், கற்பனைகளை அதிகம் வளர்த்துக் கொள்வீர்கள்.

**சிம்மம்:** திடீர் பயணமொன்று உருவாகும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயனசுகக் குறைவான நாள்.

**கன்னி:** யோகமான நாள், இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறும், பண வரவு அதிகரிக்கும், முயற்சிகள் எளிதில் கைகூடும், விரதங்களில் நம்பிக்கை கூடும்.

**துலாம்:** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி பெறும் நாள், தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** வெற்றி வாய்ப்புகள் வந்து சேர விநாயகரை வழிபட வேண்டிய நாள், சுறுசுறுப்போடு செயற்படும் நாள், பயணங்கள் எளிதில் [illegible], ஆன்[illegible] திப்[illegible].

**தனுசு:** கவலைகள் தீர கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்படலாம், கையிருப்பில் சிறிது கரையலாம், முயற்சிகள் தாமதமாகலாம்.

**மகரம்:** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், நண்பர்களால் வளர்ச்சி கூடும், நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்:** தேகாரோக்கியம் சீராகும், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், தெய் வீக சிந்தனை மேலோங்கும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**மீனம்:** ஆசைகள் நிறைவேற ஆனைமுகனை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளின் கல்வி நலன் கருதி முக்கிய முடிபுகள் எடுப்பீர்கள், தொலைபேசி செய்திகள் மகிழ்ச்சி தரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மானிய உரம் விநியோகிப்பதற்கு விண்ணப்ப படிவங்கள் வழங்கல்

(கரணவாய்)

கரவெட்டி மத்தி ஜே/ 367 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த நெற்செய்கை விவசாயிகளுக்கான மானிய உரம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படவுள்ளதாக கரவெட்டி மத்தி விவசாய சம்மேளனத்தின் பொருளாளர் ச.இராச கோபால் அறிவித்துள்ளார்.




இவ் விண்ணப்பப்படிவங்கள் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை கரவெட்டி மத்தி ஜே/367 கிராம அலுவலர் பணிமனையில் வைத்து கரவெட்டி மத்தி விவசாய சம்மேளனத்தினரால் விநியோகம் செய்யப்படவுள்ளன.

எனவே விண்ணப்பப்படிவங்கள் தேவைப்படும் பயனாளிகள் அனைவரும் கரவெட்டி கமநல சேவைகள் நிலையத்தில் ஏக்கர் வரி செலுத்திய பற்றுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றை சமர்ப்பிப்பதுடன் அறவீட்டுப்பணமாக 120 ரூபா செலுத்தி விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-60)




நன்றி-மிரர்

# ஆங்கில தின விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வருடாந்த ஆங்கில தின விழா இன்று முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை தலைவரும் மொழியியல் ஆங்கில துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சுபதினி ரமேஷ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதேவேளை ஆங்கில தின போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் அதனை தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (இ

# நீண்ட காலமாக புனரமைப்பின்றி கரவெட்டி கவுந்தில் வீதியுள்ளது



(கரணவாய்)

கரவெட்டிகவுந்தில் வீதி நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படாதுள்ளதாக பயணிப்போர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால் பயணம் செய்வதில் மிகுந்த சிரமத்தினை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வீதியூடாகதினமும்பாடசாலை மாணவர்கள் உட்பட பல பொது மக்கள் பயணித்து வருகின்றனர்.

கற்கள் நிரம்பியிருக்கும் வீதியூடாக பயணிக்கும் மக்கள் தினமும் சிரமத்தினை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த வீதியூடாக செல்லும் துவிச்சக்கர வண்டிகளின் ரயர் தினமும் சேதமடைவதாக மக்களால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த வீதியை மக்கள் பயணிக்கக் கூடியவாறு தார் இட்டு புனரமைத்து தருமாறு அப்பிரதேச மக்கள் கரவெட்டி பிரதேச சபைக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.(இ-60)

# விருதினை பெறும் நூல்களும் சான்றிதழ் பெறும் நூல்களும்

கடந்த 2013 ஆம் ஆண்டு இலங்கையில் வெளிவந்த தமிழ் இலக்கியம் சார்ந்த நூல்களில் சிறந்தது என இலங்கை இலக்கியப் பேரவையால் தெரிவு செய்யப்பட்டு விருது பெறும் நூல்களும் சான்றிதழ் பெறும் நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. இது குறித்து இலங்கை இலக்கியப் பேரவை செயலாளர் சி.சிவதாசன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

இந்நூல்கள் காவியம், ஆய்வு, கவிதை, நாவல், சிறுகதை, பல்துறை, அறிவியல், சிறுவர் இலக்கியம், நாடகம், சமயம் மற்றும் மொழி பெயர்ப்பு ஆகிய வடிவங்களில் எழுதப்பட்டன.

இந்த வகையில் விருதுபெறும் நூல்களாக எல்லாள காவியம் (ஜின்னாஹ் ஷரிபுதீன், கொழும்பு), போர்க்கால இலக்கியங்கள் (எம்.சீ.ரஸ்மின், இராஜகிரிய), எழுதாத ஒரு கவிதை (த.ஜெயசீலன், யாழ்ப்பாணம்), வேப்பமரம் (கலையார்வன், யாழ்ப்பாணம்), அம்மாவின் உலகம் (த.கலாமணி, அல்வாய்), ஜன்னலைத்திற (அ.ஸ.அகமட்கியாஸ், அக்கரைப்பற்று), சுதேச மருத்துவம் பற்றியதமிழ்நூல்கள்(கலாநிதிக.நாகேஸ்வரன், கொழும்பு), அமைதிப்பூங்கா (யோ.ஜோன்சன் ராஜ்குமார், யாழ்ப்பாணம்), சூடிக்கொடுத்த சுடர்க்கொடி நாட்டிய நாடகம் (திருமதி ஜெயக்குமாரி கந்தவேள், கொக்குவில்), திருத்தலங்கள் பதினாறு (பொ.சிவப்பிரகாசம், கொழும்புத்துறை), சந்தனமரம் (கலாபூஷணம் அ.மு.பாறூக், மருதமுனை) ஆகியன விருது பெறுகின்ற நூல்களாக அமைகின்றதுடன் சான்றிதழ் பெறும் நூல்களாக, அந்தோனியார் காவியம் (மு.அருட்பிரகாசம், பாசையூர்), நாகர் எழு வன்னி ( ஞா.ஜெகநாதன், செட்டிகுளம்), பூப்படைந்த பூக்கள் (எஸ்.ஜலால்டீன், ஒலுவில்), குடிமைகள் (தெணியான், வல்வெட்டித்துறை), என்னடா குலமும் கோத்திரமும் ( எஸ்.முத்துமீரான் நிந்தவூர்), திருப்பத்திற்கான தேடல்கள் (செ.அன்பராசா, கொழும்புத் துறை), குழந்தை மருத்துவம் (வைத்திய கலாநிதி சே.சிவசண்முகராசா, யாழ்ப்பாணம்), பளிங்கு மாளிகை (முகில் வண்ணன், கல்முனை), இளையோர் இசை நாடகம் த.கலாமணி, அல்வாய்), பக்தி அனுபவம் (கலாநிதி க.நாகேஸ்வரன், கொழும்பு) ஆகிய நூல்கள் சான்றிதழ்கள் பெற்றுள்ளன எனவும் இவற்றுக்கான விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ

## மொழிபெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம்

யாழ்ப்பாணம் அல்வாயை சேர்ந்த வீரசிங்கம் திவ்யநாதன் அண்மையில் அரச அங்கீகாரம் பெற்ற தமிழ், ஆங்கிலமொழி பெயர்ப்பாளர் பரீட்சையில் சித்திடைந்து யாழ். மாவட்ட நீதிமன்றில் நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் அரச அங்கீகாரம் பெற்ற மொழி பெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் யாழ்ப்பாண பல்கலைக்கழக பொருளியல் சிறப்புக்கலை பட்டதாரியும் யாழ். உயர் தொழில்நுட்ப கல்லூரியின் ஆங்கில பட்டதாரியுமாவார்.

அத்துடன் அகில இலங்கை சமாதான நீதவானாகவும் யாழ்.மாவட்ட செயலகத்தில் புள்ளிவிபர உதவியாளராகவும் கடமையாற்றி வருகின்றார். (இ

# இந்துக் கல்லூரியின் தமிழ்மொழி தினம்

(மானிப்பாய்)

யாழ். இந்துக் கல்லூரியின் தமிழ்ச் சங்கத்தின் இவ்வாண்டுக்கான "தமிழ் மொழித் தினம்" இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

தமிழ்ச் சங்கத்தின் தலைவர் செல்வன் ச.மயூரேசன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் அண்மையில் இடம்பெற்ற தமிழ்த்தினப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்படவுள்ளதாகவும் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளதாகவும் கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா அறிவித்துள்ளார். (இ-23)

# பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தீவிர டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில்



(கரணவாய்)

யாழ்.வடமராட்சி கரவெட்டி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.

இவ்வாரம் டெங்கு ஒழிப்பு வாரம் என்பதால் வீடுகள், கடைகள், அலுவலகங்கள் என்பவற்றில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தீவிரமாக இடம் பெற்று வருகின்றது.

இதற்கமைய கரவெட்டி பிரதேச சபை உத்தியோகத்தர்கள் பிரதேச சபையின் வெளிப்புறப்பகுதி, உட்புறப்பகுதி என்பவற்றை துப்புரவு செய்து டெங்கு தாக்கத்தில் இருந்து விடுபடுவதற்கான முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றனர். (இ-60)

# அதிபர் பதவிக்கான வெற்றிடத்தினை நிரப்புவதற்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். தென்மராட்சி வலய தரம் II பாடசாலையான யா/கச்சாய் அ.த.க. பாடசாலையின் அதிபர் பதவிக்கான வெற்றிடம் நிரப்புவதற்கு வடமாகாண கல்வி அமைச்சு செயலாளரின் 2008/04 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றுவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிப்போர் கொண்டிருக்கவேண்டிய தகைமைகள்,

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2:I,2:II ஐ சேர்ந்தவர்களும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I, 2-I ஐ சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத்திகதியில் இருந்து ஆகக் குறைந்தது மூன்று வருடங்களேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லையை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு/ தரம் என்பனவற்றின் வரிசைப்படி முன்னுரிமை அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

மேற்படி தகைமைகள் உடையோர் விண்ணப்பப்படிவங்களை வலயக்கல்வி அலுவலக நிர்வாகக் கிளையில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியவாறு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்குமாறு தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாரப்போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(மானிப்பாய்)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் கலாசாரப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் பேச்சு, தனிப்பாட்டு, நாட்டார் பாடல், குழு நடனம், தனி நடனம், தனிப்பாட்டு, செய்தி வாசித்தல், புத்தாக்க நடனம், நாடகம் உள்ளிட்ட பல போட்டிகள் மூன்று மொழிப் பிரிவுகளிலும் இடம்பெறவுள்ளன.

ஆரம்பத்தில் போட்டிகள் மாவட்ட மட்டத்தில் இடம்பெறுவதுடன் அதன் வெற்றியாளர்கள் தேசிய மட்டப் போட்டிக்கு தகுதி பெறுவார்கள்.

இளைஞர் கழகங்களில் அங்கத்துவத்தைக் கொண்டவர்கள் போட்டிக்கு உள்வாங்கப்படுவதுடன் பங்கு பற்றும் வயதெல்லை 13 முதல் 28 வரையாகும்.

போட்டிகளில் பங்கு பற்ற விரும்பும் இளைஞர்கள் அந்தந்த பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தருடனோ அல்லது கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட காரியாலயத்துடனோ தொடர்பு கொண்டு நாளை சனிக்கிழமைக்கு முன்பாக விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-23)

# சிறுமிக்காக நீதி கோரி வாதாட சட்டத்தரணிகளை நியமியுங்கள்

சிறுமிக்காக வாதாட சட்டத்தரணிகளை நியமியுங்கள். அதற்கு தேவையான என்னாலான உதவிகளை செய்ய ஆயத்தமாக இருக்கின்றேன்' என ஊக்குவிப்பு உற்பத்தி திறன் விருத்தி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தவிசாளருமான பசீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

'சிறுமி எம்.எஸ்.பாத்திமா சீமாவின் படுகொலையானது அனைவரையும் துயர த்தில் ஆழ்த்தியது மட்டுமல்ல சமூகத்தை விழிப்படையவும் செய்துள்ளது' என்றும் அவர் தெரிவித்தார். மட்டக்களப்பு, காததான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஞ்சந்தொடுவாய் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட மர்ஹூமா எம்.எஸ்.பாத்திமா சீமா எனும் 9 வயது சிறுமியின் வீட்டுக்கு கடந்த புதன்கிழமை விஜயம் கொண்ட அமைச்சர், சிறுமியின் குடும்பத்தவருக்கு ஆறுதல் தெரிவிக்கும்போதே இதனை தெரிவித்தார்.

'சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி படுகொலை செய்த நபர் சட்டத்தின் பிடியிலிருந்து நிச்சயம் தப்பமுடியாது. சிறுமியின் வாழ்வை அழிதத இவரை இறைவனும் நிச்சயம் தண்டிப்பான். இவ்வாறான படுபாதகமான செயல்களை செயதவர்கள் உலகிலேயே தண்டிக்கப்பட்ட வரலாறுகளையே நாம் பார்க்கின்றோம்' என்றும் அவர் இதன்போது தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன்போது முன்னாள் மாகாண சபை உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸலிம் காங்கிரசின் கொள்கை பரப்புச் செயலாளருமான யு.எல்.எம்.என்.முபீன் உட்பட முக்கியஸ்தர்களும் சிறுமியின் குடும்பத்துக்கு ஆறுதல் தெரிவித்தனர். (இ)

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை

வட்டாரம்:- 11, ஆதன இலக்கம்:- 100/10 (புதிய பதிவு), நவாலி வீதி

வட்டாரம் 11 ஆதன இலக்கம் 100/10 (புதிய பதிவு) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாண, யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய், கோவில்பற்று ,நவாலி இறை "தந்தனை") என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 குளி ஒன்பது தசம் ஆறு (நி.பரப்பு 01 குளி 9.6) கொண்ட இவ்வாதனமானது நவாலியைச் சேர்ந்த சண்முகம் நாராணி கைம்பெண் செல்லாச்சி மற்றும் நாராணி இராசரத்தினம், நாராணி நடராசா, நாராணி ஞானம் ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் நவாலியைச் சேர்ந்த நாராணி சின்னத்துரை என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.இரா. வசந்தசேனன் முகதாவில் நிறைவேறிய 2132 ஆம் இலக்க 22.05.1990 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "தந்தனை" நிலப்பரப்பு 01 குளி 9.6 கொண்ட இவ்வாதனத்தி ற்கு உரிமைகோருபவர்கள்யாராவது இருந்தால்அவ்வுரிமையை உறுதிப்ப டுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாரா வது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் நாராணி சின்னத் துரை எண்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய். (7623)


## Jaffna Regional Centre

Academic year-2014/2015

| Programme | Entry Qualification | Closing Date |
|---|---|---|
| Bachelor of Technology | Three Passes in G.C.E. A/L physical science stream or Successful completion of Foundation courses in Technology or any other equivalent Qualification *Those who are waiting for the G.C.E A/L results can apply | 30th September 2014 |
| Bachelor of Industrial Studies | Three Passes in G.C.E. A/L any Stream or Successful completion of Foundation courses in Science or any other equivalent Qualification *Those who are waiting for the G.C.E A/L results can apply | 30th September 2014 |
| Bachelor of Science | Three passes in G.C.E. A/L Science/Maths Stream or Successful completion of Foundation courses in Science or any other equivalent Qualification | 07th October 2014. |

Applications are issued from following centres.

| | |
|---|---|
| The Open University of Sri Lanka<br>Jaffna Regional Centre,<br>Brown Road, Kokuvil, Jaffna.<br>Tel: 0212223374 | The Open University of Sri Lanka<br>Kilinochchi Study Centre,<br>155th Mile post, Kandy Road,<br>Kilinochchi.<br>Tel: 0212283970 |

Note:
Completed applications should be handed over or Sent by Registered

the closing date.
Further details can be obtained from www.ou.ac.lk

Registrar,
Open University of Sri Lanka

(அ-8527)



## Hatton National Bank

### அடகுப்பொருட்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, சுன்னாகம், மானிப்பாய், கைதடி, திருநெல்வேலி, சங்கானை, கிளிநொச்சி வடக்கு, கிளிநொச்சி தெற்கு, அச்சுவேலி, கொடிகாமம்,முள்ளியவளை, மல்லாவி, நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, முல்லைத்தீவு, வேலணை ஆகிய கிளைகளில் 31.08.2013 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுநகைகள் 22.09.2014 தொடக்கம் 26.09.2014 (திங்கள்-வெள்ளி) வரை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 06.00 வரை இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ். கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஏல விற்பனைத்திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

அ-8530

ஹற்றன் நஷனல் வங்கி



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 32 சூரி, செவ்.<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:கனடா PR<br>தொ.இ: B/3590 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பரணி 1<br>கி.பா: 32<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc பட்டதாரி, விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்.<br>தொ.இ: G/2779 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 48.25 செவ்.12 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: BA ஆசிரியர்<br>தொ.இ: B/3591 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: 12.25 செவ் 4 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/குடும்ப தாதி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: பெண் விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ: G/2783 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பரணி 2<br>கி.பா: 25.5 செவ் 12 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>தொ.இ: B/3593 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: 8<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BBA ஆசிரியர்<br>தொ.இ: G/2787 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>கி.பா: 36<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: B/3594 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 42 செவ் 1 இல்<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்:தனியார் தொழில்<br>தொ.இ: G/2788 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் ஒட்டுண்ணிகளாக மாறியிருப்பதே சூழல் அனர்த்தங்களுக்கு மூலகாரணம்

## வடமாகாண விவசாய அமைச்சர் சுட்டிக்காட்டு

பூமித்தாயுடன் கொடுத்து வாங்கும் உறவைப் பேணி வாழ்ந்த நாம், இன்று பூமித்தாய்க்கு எதனையுமே வழங்காமல் அவளுடலில் இருந்து எல்லாவற்றையுமே உறிஞ்சும் ஒட்டுண்ணிகளாக மாறிவிட்டிருக்கிறோம். இதுவே இன்றைய சூழல் அனர்த்தங்களுக்கெல்லாம் மூல காரணம் என்று வடக்கு மாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற் றாடல் அமைச்சா பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளாா.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பாடசாலைகளிலும் இருந்து தெரிவு செயயப்பட்ட நூறு மாணவர்களுக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் 'ஆரோக்கிய வாழ்வு' என்னும் கருப்பொருளில் மூன்று நாள் வதிவிடக் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் இறுதி நாளான நேற்று முன்தினம் கலந்து கொண்டு சுற்றுச்சூழலும் ஆரோக்கியமும என்ற தலைப்பில் அமைச்சர் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளாா.

அவா் அங்கு தொடா்ந்து உரையாற்றுகையில்,

பூமியை நாம் பூமித்தாய் என்றும் அன்னை பூமி என்றும் அழைப்பது பூமியில் நாம் பிறந்து வாழ்வதால் மாத்திரம் அல்ல. பூமியே தன்னளவில் உயிருள்ள ஒரு பேரன்னை தான். நாம் உயிரோடு இருபபதால் எமது உடலின் வெப்பநிலையை மாறாது பேணுகிறோம்.

இரத்தத்தில் உள்ள குளுக்கோசின் செறிவைச் சீராகப் பேணுகிறோம். இந்த ஒரு சீர்த்திட நிலை பூமிக்கும் இருக்கிறது.

எங்களைப் போன்றே பூமியும் தன் மேற்பரப்பின் வெப்பநிலையை, ஒட்சிசனின் சதவீதத்தை, கடல்நீரில் உப்பின் செறிவையெல்லாம் மாறாமல் பேணி வருகிறது. இதனால் பூமியை உயிருள்ள ஒரு பேரன்னையாகக் கருதும் போக்கு சூழலியல் தத்துவவியலாளர்களிடையே உருவாகியுள்ளது.

எமது உடலின்உள்ளே எண்ணில அடங்காத அளவுக்கு நுண்ணங்கிகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அதே போன்றுதான்பூமி என்னும்பேரன்னையின் உடலினுள்ளும் நாங்கள உட்படக் கோடானுகோடி உயிரினங்கள்வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

எமது உணவுக்குழாயில் வாழுகின்ற இ.கோலி பக்றீரியாக்கள் எமக்குத் தேவையான விற்றமின்களைத் தொகுத்துத தர, நாம் அதற்கு உணவையும் வாழ்வதற்கு இடத்தையும் வழங்கி வருகிறோம்.

ஒன்றுக்கொன்று கொடுத்து வாழும ஒன்றியவாழி முறையில் நீடிப்பதாலேயே எமது உடல் ஒருபோதும் இந்த பக்றீரயாக்களை அழிப்பதற்கு நினைப்பதில்லை.

ஆனால், நோய்க்கிருமிகள் உடலினுள் நுழைந்து பல்கிப்பெருகி நச்சுகளைச் சுரந்து எமது உடற்கலங்களைச் சிதைக்க ஆரம்பிக்கும்போது எமது உடல் நோய்க்கிருமிகளை அழிக்கும் முயற்சியில் இறங்குகின்றது.

அதேபோன்றுதான், பூமித்தாய்க்குக் கொடுத்து வாங்கி ஒன்றிய வாழ்க்கை வாழ்ந்து வந்த நாம் இப்போது ஏழு பில்லியன்களுக்கும் மேலாகப் பெருகிப் பூமியின் வளங்களையெல்லாம் கண்மூடித்தனமாக அழிக்க ஆரம்பித்து விட்டோம்.

பூமித்தாயின் மடியை நஞ்சுகளால் நிரப்பி வருகிறோம். இதனால் தான் பூமி அன்னை எமது எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கில் எங்களை இயற்கை அனர்த்தங்களால் அழிக்க ஆரம்பித்திருக்கிறாள்.

கடற்கோள், மழைவெள்ளம், கடும் வரட்சி இவற்றால் ஏற்படும் கொள்ளை நோய்கள் எல்லாம் எங்களைக் கட்டுக்குள் கொண்டு வருகின்ற இயற்கையின் பேரிடர்கள்தான். எனவே பூமியுடன் கொடுத்து வாங்கும் பழைய உறவுமுறைக்கு நாங்கள் திரும்பப் போகிறோமா அல்லது ஒட்டுண்ணிகளாகத்தான் வாழப்போகிறோமா என்பது தொடர்பாக மாணவர்களாகிய நீங்கள் முடிவெடுக்க வேண்டும். இந்த முடிவில்தான் மனுக்குலத்தின் எதிர்காலம் இந்தப் பூமியில் தங்கியுள்ளது என்றும் தெரிவித்துள்ளாா். (2)

# குளவிக்கொட்டு; கர்ப்பிணி உட்பட ஒன்பது பேர் பாதிப்பு

மஸ்கெலிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, மஸ்கெலிய லக்ஷபான தோட்டம் வாழைமலை பிரிவில் நேற்று வியாழக்கிழமை குளவி கொட்டுக்குள்ளாகி 8 பேர் மஸ்கெலிய பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தேயிலைக் கொழுந்து பறித்துக் கொண்டிந்த வேளையில், தேயிலைப்பகுதியிலிருந்து கலைந்து வந்த குளவிக் கூடு இவ்வாறு தொழிலாளிகளை தாக்கியுள்ளது. இதில் கர்ப்பிணி பெண் ஒருவர் உட்பட 7 ஆண்களும் அடங்குகின்றனர்.

இதில் பாதிக்கப்பட்ட 8 பேரில் இருவர் தங்கி சிகிச்சை பெற்று வருவதாகவும் மேலும் 6 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 100 | 100 |
| தக்காளி | 30 | 60 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 40 | 50 | 60 |
| கோவா | 80 | 70 | 60 | 60 |
| கரட் | 70 | 80 | 70 | 100 |
| பூசணி | 20 | 30 | 20 | 40 |
| புடோல் | 40 | 50 | 50 | 40 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 60-90 | 80 | 90 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 100 | 90 |
| பாகற்காய் | 90 | 80 | 70 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 90 | 40 | 70 | 100 |
| பயற்றங்காய் | 30 | 30 | 40 | 40 |
| லீக்ஸ் | 120 | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 60 | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 80 | 50 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 40 | 60 | 60 | 80 |
| போஞ்சி | 140 | 100 | 90 | 60 |
| கத்தரிதம்புள்ள | 30 | 50 | 50 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 25 |
| தேசிக்காய் | 60 | 100 | 110 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 30 | 30 | 25-35 |
| இராசவள்ளி | 120 | 100 | 90 | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 104

எஸ். கவித்தா





பி.பிறேமகாந்தன்




வே.துசிதா





க.சிவதர்மிகா




கே.கஜன்



கு.மைந்தன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலுமடு உப-அலுவலக செயற்பாடுகள் சொந்த கட்டடத்தில் இயங்க வேண்டும்

## பொதுமக்களும் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் வடமாகாண முதலமைச்சரிடம் வேண்டுகோள்

(மல்லாவி)

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குரிய ஒலுமடு உப-அலுவலக கட்டடத்திலிருந்து இராணுவத்தினரை வெளியேற்றித்தர வேண்டுமென இச்சபையின் கீழுள்ள பிரதேச மக்களும் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.




இது தொடர்பாக தெரிய வருவதாவது,

புதுக்குடியிருப்பு பிரதேச சபையானது முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு பிரதேச செயலக பிரிவுகளையும் 46 இற்கு மேற்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளையும் 968 சதுரகிலோ மீற்றர் பரப்பளவையும் கொண்ட 17 ஆயிரத்து 550 இற்கு மேற்பட்ட குடும்பங்களைக் கொண்ட ஒரு பரந்துபட்ட பிரதேசமாகும். இச் சபையானது யாழ்.மாவட்ட பரப்பளவுடன் ஒப்பிடுகையில் ஒரு சில சதுர கிலோ மீற்றர் பரப்பளவுகளே குறைவானதாகும்.

இச் சபையின் கீழ் இயங்கும் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், ஒலுமடு ஆகிய மூன்று உப-அலுவலகங்கள் ஊடாக மக்களுக்கான தமது சேவையை வழங்கி வருகின்றது.

ஆயினும் ஒலுமடு உப-அலுவலகத்தின் செயற்பாடுகள் இடப்பெயர்விற்கு முன் நூலக வசதி மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை உட்பட மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றக்கூடிய அலுவலக வசதிகளுடன் சிறப்பாக இயங்கி வந்தது.

குறித்த பிரதேசத்தில் மீள்குடியேற்றத்தின் பின் ஐந்து வருடங்கள் கடந்த நிலையில் அக்கட்டடத்தில் இராணுவத்தினர் இற்றைவரை நிலை கொண்டிருப்பதால் இச் சபையின் உப-அலுவலக செயற்பாடுகள் ஏ-9 வீதியிலுள்ள திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயத்தின் சுற்றாடல் பகுதியில் அமைந்துள்ள சிறு வர்த்தக நிலையமொன்றிலே நடைபெற்று வருகின்றது.

இவ்அலுவலகத்தின் மூலம் கழிவகற்றல், நீர் விநியோகம் ஆகிய செயற்பாடுகள் மட்டுமே முன்னெடுக்கப்படுகின்றன.

பொது மக்களுக்கான அலுவலக நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெறுவதால் தமது தேவைகளான வீடுகள் அமைத்தல், மலசலகூடங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் அமைத்தல் உட்பட பல்வேறு வகையான தேவைகளின் அனுமதிகளைப் பெறுவதற்காக புதுக் குடியிருப்பு பிரதேச சபையின் தலைமைச் செயலகம் அமைந்துள்ள புதுக்குடியிருப்பு பகுதிக்கு பணத்தினை விரையம் செய்து மக்கள் அலைந்து திரியும் அவல நிலை காணப்படுகிறது.

இவ் அலுவலகத்தில் இயங்கிய நூலகத்தின் மூலம் மாணவர்கள் அறிவுசார்ந்த நூல்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த நூல்கள் என்பவை உள்ளடங்கலான நூலகப் பயன்பாடுகளை இடப்பெயர்விற்கு முன்னர் மாணவர்கள் பயன்படுத்தினர்.

இதேபோல் ஆயுர்வேத வைத்தியசாலையின் செயற்பாடுகளும் யுத்த காலப்பகுதியில் சிறப்பாக இயங்கிய போது பல மக்களின் உயிர்களைக் காப்பாற்றிய நிலையில் தற்போது இவ்விரண்டின் செயற்பாடுகளையும் பெறமுடியாதுள்ளது.

எனவே மேற்படி பிரதேச சபையினுடைய ஒலுமடு உப-அலுவலகத்தின் கட்டட வளாகத்தில் இருக்கின்ற இராணுவத்தினரை வேறொரு பகுதிக்கு மாற்றி இவ் அலுவலகம் மீள இயங்கி மக்கள் பயன் பெறுவதற்கு பெற்றுத்தர வேண்டுமென மேற்படி வேண்டுகோளில் தெரிவித்துள்ளனர். (2-15)

## பரிசளிப்பு விழாவும் சிலை திறப்பு விழாவும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் அம்பலவன் பொக்கணை மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் சரஸ்வதி சிலை திறப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் சி.ஏகாம்பரம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன் கலந்து கொண்டு சிலையினை திறந்து வைப்பதுடன் நிகழ்வுகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கி வைப்பார்.

இதன்போது இச்சிலையினை செதுக்கி உருவமைத்த கலைஞானி துரைசிங்கம் குமரநாதன் பாராட்டி கௌரவிக்கப்படுவார்.

அதனைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (2-29)

# கூழாமுறிப்பு கிராமத்திற்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முழுமை பெறவில்லை

## பாதிக்கப்பட்ட மக்கள் கவலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கூழாமுறிப்பு கிராமத்தின் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு நான்கு வருடங்கள் கடந்துள்ள போதிலும் பூரணமான அபிவிருத்திவேலைத்திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லையென அப்பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.





குறித்த கிராமம் போரின் காரணமாக மூன்று தடவைகள் இடம்பெயர்வை சந்தித்த பின் னர் கடந்த 2010 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 10 ஆம் திகதி மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு தற்போது அங்கு 131 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இம் மக்களின் தொழில்களாக விவசாயம், கால் நடை வளர்ப்பு, சுயதொழில் என்பன காணப்படுகின்றன.

மீள்குடியேறிய இக்கிராமத்திற்கு ஐ.ஓம்.எம் (IOM) நிறுவனத்தினால் 35 தற்காலிக வீடுகளும் கரித்தாஸ், கியூடெக் நிறுவனங்களால் 26 தற்காலிக வீடுகளுமாக மொத்தம் 61 தற்காலிக வீடுகள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன.

இக்கிராமத்திற்கு யு.என். ஹபிரற் (UNHABITAT) நிறுவனத்தினால் 23 நிரந்தர வீடுகளும் ஜேர்மன் செஞ்சிலுவை சங்க நிதியுதவியுடன் SLRC இன் ஏற்பாட்டில் 33 புதிய வீடுகளுமாக மொத்தம் 56 வீடுகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. இன்னும் 61 புதிய வீடுகள் மக்களுக்கு தேவைப்படுகின்றன.

இந்திய வீட்டுத்திட்டம் இக் கிராமத்திற்கு நடைமுறைப் படுத்தப்படவில்லை.

7 வீடுகள் பகுதி சேதமடைந்துள்ள நிலையில் அவற்றில் மூன்று வீடுகள் மட்டுமே யு.என்.ஹபிரற் நிறுவனத்தினால் திருத்தப்பட்டுள்ளன. மிகுதி நான்கு வீடுகளும் இது வரை திருத்தங்கள் எதுவும் நடைபெறாத நிலையிலுள்ளன.

இக் கிராமம் முல்லைத் தீவு-ஒட்டுசுட்டான் பிரதான வீதிக்கு அண்மையில் அமைந்துள்ளது. அவ்வீதியூடாகவே ஏனைய பிரதேசங்களுக்கும் மின்சாரம் வழங்கப்படுகின்ற போதும் இக்கிராமத்திற்கு இது வரை மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

மின்சாரமில்லாத கிராம மக்களுக்கு மண்ணெண்ணெய் முத்திரை வழங்கும் செயற்பாட்டின் மூலம் ஆரம்பத்தில் மூன்று மாதங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு பின்னர் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இங்குள்ள 36 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் இன்னும் 40 குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தேவையுள்ளது.

இக் கிராமத்தில் முன்னாள் பேராளிகளின் வாழ்வாதார உதவிகளுக்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் உதவிகள் இதுவரை அவர்களை சென்றடையவில்லை.

15 குடும்பங்கள் குடியிருப்பு காணிகள் இன்றியும் 50 குடும்பங்கள் விவசாய காணிகள் இன்றியும் அல்லற்பட்டு வாழ்ந்து வருகின்றன.

பிரதான வீதி ஒன்று, உள் வீதிகள் ஏழு, வயல் வீதி ஒன்று அனைத்தும் திருத்தங்கள் இன்றி காணப்படுகின்றன.

அத்தோடு மாதர் கிராம அபிவிருத்தி சங்கம், கமக்கார அமைப்பு, சனசமூக நிலையம், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலகம், பொருளாதார அபிவிருத்தி அலுவலகம், கிராம சேவையாளர் அலுவலகம், முன்பள்ளி ஆகியவற்றிற்கு நிரந்தர காணிகள் இருந்தும் கட்டடங்கள் அமைத்து வழங்கப்படவில்லை.

அத்துடன் மக்கள் பாவனைக்கு மூன்று பொதுக் கிணறுகளும் விளையாட்டு மைதானமும் அமைக்கப்பட வேண்டும்.

எனவே அடிப்படை வசதிகளின்றி காணப்படும் இக்கிராமத்திற்கு உரிய அதிகாரிகள் நேரில் வந்து பார்வையிட்டு தமக்கான தேவைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்களால் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (2-267)

# திவிநெகும வீட்டுத்தோட்ட வேலைத்திட்ட செயலமர்வு

(கிளிநொச்சி)

திவிநெகும வீட்டுத்தோட்ட வேலைத்திட்ட செயலமர்வு எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு உருத்திரபுரம் கமநல சேவை நிலையத்தில் உருத்திரபுரம் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ஜெனார்த்தனன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், திவிநெகும உத்தியோகத்தர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், வீட்டுத்தோட்ட கிராமிய குழுவினர் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் வளவாளர்களாக விவசாய போதனாசிரியர்கள் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கி வைக்கவுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு அவர் கேட்டுள்ளார். (2-254)

# நகர அபிவிருத்தி குறித்து நடைபெற்ற கலந்துரையாடல்

வவுனியா நகரசபை எல்லைக்குட்பட்ட 11 கிராம சேவையாளர் பிரிவுகளில் கிராமத் தலைவர்கள், பிரஜைகள் குழு உறுப்பினர்களுக்கும் நகர சபை செயலாளருக்கும் இடையிலான நகர அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

நகரசபை வேலைத்திட்டத்துக்காக மேலதிகமாக புறநெகும திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் மக்கள் பங்களிப்புடனான வேலைத்திட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்வதற்காக மக்கள் தலைவர்களுடனான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் தாண்டிக்குளம் [illegible] வீதியில் நகரசபையினால் நடத்தப்படும் கொள்களத்தை ஒரு பொதுவான வேலைத்திட்டமாக புதிய முறையில் நவீன வசதிகளுடன் சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்காத வகையில் திருத்தி அமைக்க வேண்டும் என்று ஏகோபித்த முறையில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

அத்துடன் குருமன்காட்டு பகுதியில் அமைந்திருக்கும் சிறுவர் பூங்காவை திருத்தியமைத்து தரவேண்டும் என்ற கோரிக்கைகள் முக்கியமாக முன்வைக்கப்பட்டன.

தொடர்ந்து நகர வீதி அபிவிருத்தி மற்றும் வவுனியா நகரின் பொதுவான அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகவும் குருமன்காட்டு பகுதியில் முதியோர ஒய்வகம் ஒன்று அமைப்பது உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. (2-250)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

927




நெப்டியூன் கண்டுபிடிக்கப்பட்டதும் ஒன்பதாவது கோளைக் கண்டுபிடிக்க வேண்டும் என பல விஞ்ஞானிகள் முயன்றனர். இறுதியில் 1930-பெப்ரவரி-18 இல் புளூட்டோ கண்டுபிடிக்கப்பட்டது. கிளைட் தாம்பாஹ் என்பவர், நீண்ட தேடுதல் வேட்டைக்குப் பிறகு இந்தக் கோளைக் கண்டுபிடித்தார். முதலில் ஒன்பதாவது கிரகம் எனப்போற்றப்பட்ட புளூட்டோ, 2006 குள்ளக்கோள் என்று ஆகிவிட்டது.



## பதவி இழந்த புளூட்டோ!


ஒன்பதாவது கோள் கண்டுபிடிக்கப்பட்டதும் வெனிட்சா பர்னி என்ற 11 வயது நிரம்பிய சிறுமிதான் அதற்கு புளூட்டோ என்று பெயர் சூட்டினாள். உரோமானியப் பாதாளக்கடவுளின் பெயர் புளூட்டோ!

புளூட்டோ சூரியனைச் சுற்ற 76 ஆண்டுகள் எடுக்கும் அதாவது புளூட்டோ கண்டுபிடிக்கப்பட்டு, அது மூன்றில் ஒரு பகுதி சுற்றுவதற்கு கோள் என்ற பதவியிலிருந்து குள்ளக்கோள் என்ற புதிய பிரிவுக்குச் சென்று விட்டது!




குள்ளக்கோள் என்றாலும் புளூட்டோவுக்கு ஐந்து துணைக் கோள்கள் உள்ளன. சௌரான், ஹைட்ரா, நிக்ஸ் ஆகிய மூன்று துணைக்கோள்களைத் தவிர, இரண்டு துணைக் கோள்களை ஹப்புள் தொலைநோக்கி 2012 இல் கண்டு பிடித்தது.




சுட்டி




புளூட்டோ, பூமியின் நிறையில் வெறும் 0.2 சதவிகித நிறைதான் கொண்டுள்ளது. நமது நிலவு மற்றும் டைட்டன், ரைட்டன் உட்பட ஏழு துணைக்கோள்களை விட இது சிறியது!

## 09.2014 19 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

➢1356- இங்கிலாந்து "போல்ட்டியேர்" என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் ஃபிரான்சை வென்றது.

➢1658- யாழ்ப்பாணத்தில் உரோமன் கத்தோலிக்க மத குருமாரை மறைத்து வைத்திருப்பது மரண தண்டனைக குரிய குற்றமாக டச்சு அரசால் அறிவிக்கப்பட்டது.

➢1862- அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் மிசிசிப்பியில் இடம்பெற்ற போரில் கூட்டமைப்பினரைத் தோற்கடித்தனர்.

➢1870- ஃபிரான்சுக்கும் புரூசியாவுக்கும் இடம்பெற்ற போரில் பாரிஸ் நகரைக் கைப்பற்றும் நிகழ்வு ஆரம்பமானது. பாரிஸ் 1871, ஜனவரி 28 இல் புருசியாவிடம் வீழ்ந்தது.

➢1881 - ஜூலை 2இல் சுடப்பட்டுப் படுகாயமடைந்த அமெரிக்க அதிபர் ஜேம்ஸ் கார்ஃபீல்ட் இறந்தார்.

➢1893 - சுவாமி விவேகானந்தர் சிக்காகோவில் உலக சமய மாநாட்டில் உலகப் புகழ் பெற்ற சொற்பொழிவை நிகழ்த்தினார்.

➢1893 - நியூசிலாந்து பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய முதலாவது நாடானது.

➢1942 - மேற்கு உக்ரைனில் புரோடி என்ற இடத்தில் கிட்டத்தட்ட 2,500 யூதர்கள் நாசி வதைமுகாமுக்கு அனுப்பப்பட்டனர்.

➢1944 - பின்லாந்துக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது.

➢1952 - ஐக்கிய அமெரிக்கா சார்லி சப்ளின் இங்கிலாந்து சென்று விட்டுத் அமெரிக்க திரும்புவதற்குத் தடை விதித்தது.

➢1957 - ஐக்கிய அமெரிக்கா நிலத்துக்கடியே தனது முதலாவது அணுகுண்டுச் சோதனையை நடத்தியது.

➢1983 - சென் கிட்ஸ் மற்றும் நெவிஸ் ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலை பெற்றது.

➢2006 - தாய்லாந்தில் இராணுவப் புரட்சியில் இராணுவத் தளபதி சோந்தி பூன்யாரத்கிலின் ஆட்சியைக் கைப்பற்றினார்.

### பிறப்புகள்

➢1911 - வில்லியம் கோல்டிங், இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய நாவலாசிரியர் (இ. 1993)

➢1965 - சுனிதா வில்லியம்ஸ், அமெரிக்க விண்வெளி வீராங்கனை

### இறப்புகள்

➢1881 - ஜேம்ஸ் கார்ஃபீல்ட், ஐக்கிய அமெரிக்காவின் 20ஆவது குடியரசுத் தலைவர (பி. 1831)

➢[illegible] - கே.பி.சுந்தராம்பாள், தமிழிசைக் கலைஞர் (பி. 1908)

அன்பு வாசகர்களே!
சிறுவர் பகுதிக்கு உங்கள் அபிப்பிராயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. உங்கள் அபிப்பிராயங்களை
ஆசிரியர், சிறுவர் பக்கம்
வலம்புரி,
இல.03, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்

..69

...உலகக் கோப்பை முடிந்த கையுடன் சிங்கப்பூர் மற்றும் ஷார்ஜாவிற்கு இந்தியக்குழு பயணித்தது. இந்தியா, இலங்கை பாகிஸ்தான் அணிகள் மீண்டும் மோதின. ஜெயசூர்யா 48 பந்துகளில் 100 ரன்கள் எடுத்து சாதனை புரிந்தார். இந்தியா இரண்டு தொடர்களையும் இழந்தது. ஆனால், சச்சின் இரண்டு சதங்கள் எடுத்தார். ஆனால், இந்த சந்தோஷங்களுக்கு இடையே சச்சினுக்கு சில பிரச்சினைகளும் இருந்தன. விளம்பர ஒப்பந்தப்படி சச்சின் எம்.ஆர்.எஃப். லோகோவை தனது மட்டையில் பதித்து வைத்திருந்தார். ஆனால், அது அனுமதிக்கப்பட்ட 'அளவை விட அதிகமாக இருந்ததால் அவரது சம்பளத்தில் இருந்து 25 சதவீதம் அபராதம் விதிக்க ஐ.சி.சி உத்தரவிட்டது.

சச்சின் ஆட்டம் ஏறுமுகத்தில் இருக்க அணியின் கேட்பன் அசாரின் ஆட்டம் நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வந்தது. சில நேரங்களில் அசாருக்கு பதில் சச்சின் துணை கேப்டன் என்ற பொறுப்புடன் கேப்டன் பணிகளை மேற்கொண்டிருந்தார். பாகிஸ்தானுடனான ஷார்ஜா ஆட்டத்தில் இந்தியா 28 ரன்களில் வெற்றிபெற அசார் 10 பந்துகளில் 29 ரன்களே முக்கியமானவை. இந்த வெற்றி ஓரளவிற்கு அசார் எதிர்பாளர்களை அடக்கி வைத்தது. ஆனால், ஒட்டுமொத்த தொடரை இழந்ததால் மீண்டும் மீண்டும் அசாருதீன் கேப்டன் பதவியிலிருந்து விலக வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுவடையத் துவங்கின. டெஸ்ட் போட்டிகளுக்குத் தேர்வு செய்யப்பட்ட புதிதில் அசாருதீன் சதங்களாக அடித்து ரசிகர்க ளைக் குதூகலித்தார். அதுவும் அவருக்கு கொல்கத்தா ஈடன் மைதா



### என்னைப்போலவே ஆடுகிறார்! பிராட்மென் புகழாரம்

னம் ராசியானது. இடையிலே சங்கீதா பிஜ்லானி என்னும் நடிகையுடன் அவருக்குத் தொடர்பு இருப்பதாக செய்திகள் வெளியானதால் அவரால் விளையாட்டில் கவனம் செலுத்த முடியவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. அது பின்னர் உண்மையாகவும் ஆனது. அசார் தனது முதல் மனைவியை விவகாரத்து செய்துவிட்டு சங்கீதாவைத் திருமணம் செய்துகொண்டார்.

ஆக, தனது தலைமைப் பதவிக்கு எப்போது வேண்டுமானாலும் வெட்டு விழும் என்பதை அவரும் எதிர்பார்த்தே இருந்தார். உலகக்கோப்பை, சிங்கப்பூர், ஷார்ஜா என தொடர்ந்து தோல்விகளையே தந்ததால் இங்கிலாந்து பயணத்திற்கு முன்பு அசாரை கழற்றி விடலாம் என்றுகூட கிரிக்கெட் வாரியம் யோசனையில் இருந்தது. ஆனால், கிரிக்கெட் வாரிய உறுப்பினர்கள் அசாருக்குக் கடைசியாக ஒரு வாய்ப்பு வழங்கலாம் என்று கோரினார்கள். எனவே, அசாருக்கு தனது திறமையை நீரூபிக்க கடைசி வாய்ப்பாக இங்கிலாந்து சுற்றுப்பயணம் அமைந்தது. இங்கிலாந்து தொடரைக் கைப்பற்றினால் மட்டுமே இனி கிரிக்கெட்டில் நமக்கு எதிர்காலம் என்ற அச்சத்துடனும், ஜெயிப்போம் என்ற நம்பிக்கையுடனும் அசார் தலைமையில் இந்திய அணி பயணம் மேற்கொண்டது. இங்கிலாந்தில் 3 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் விளையாடப்பட்டன. மூன்று ஒருநாள் போட்டிகளில் ஒன்று ரத்தாக மீதி இரண்டில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. முதல் டெஸ்ட் போட்டிகளுக்கு முன்பாக சித்துவுக்கும், அசாருக்கும் மனக்கசப்பு ஏற்பட அனுபவம் வாய்ந்த சித்து இந்தியாவிற்குத் திரும்பிவிட்டார். இந்தத் தொடரில் மொத்தம் 7 புதிய வீரர்கள் அறிமுகமாயினர். இந்தியாவின் சார்பில் தற்போதைய முன்னணி வீரர்களான சவுரவ் கங்குலி மற்றும் ராகுல் டிராவிட் உள்பட நால்வர் அறிமுகமாயினர். முதல் டெஸ்டில் சச்சின் அபாரமாக ஆடி 122 ரன்கள் சேர்த்தார். சச்சினுக்கு இது ஒன்பதாவது செஞ்சுரி. ஆனாலும், பயன் இன்றி இந்தியா தோல்வியையே தழுவியது. லார்டஸ் மைதானத்தில் நடந்த இரண்டாவது டெஸ்டில் கங்குலி 131 மற்றும் டிராவிட் 95 ரன்கள் குவித்தனர். போட்டி டிராவில் முடிந்தது. மூன்றாவது இறுதிப்போட்டி டிரென்ட் பிரிட்ஜில் நடந்தது.

கிரிக்கெட் பீஷ்மர் என்று அழைக்கப்படும் டான் பிராட்மென் அவர்களால் ரசிக்கப்பட்ட வீரர் நமது சச்சின். சச்சினைப்பற்றி அவர் கூறிய கமெண்ட் சச்சின் என்னைப்போலவே ஆடுகிறார் என்பதுதான். இதைவிட சச்சினுக்கு வேறு என்ன புகழுரை வேண்டும். வசிஷ்டர் வாயால் பெற்ற பிரம்மரிஷி பட்டம் அல்லவா இது!

கே. ரமேஷ் (தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

....அதனால் தான் உங்கள் வயது உங்களைப் பொறுத்தது என்கிறார்கள். அதன் பொருள் உங்கள் வயது உங்கள் மனதின் வயதைப்பொறுத்தது என்பதாகும். எனவே, உங்கள் வயது உங்கள் பக்குவத்தைப் பொறுத்தது. உடலின் வயதையல்ல. உங்கள் வயது 70 ஆக இருக்கலாம்; ஆனால் 20 வயதின் புரிந்துகொள்ளும் தன்மையே இருக்கலாம். அல்லது, உங்கள் வயது 18 ஆக இருக்கலாம்; ஆனால், 80 வயது ஆனவரின் பக்குவமும் புரிந்துகொள்ளும் தன்மையும் இருக்கலாம். ஆகவே, உங்களின் வயது முதுமை காரணமாக நீங்கள் மேன்மையானவர் என்று உரிமை கொண்டாடாதீர்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நேரடிச் சீடரான ஸ்வாமி பிரம்மானந்தரைப் பற்றி ஒரு அழகான கதை இருக்கிறது....

ஒருநாள் ஸ்வாமி பிரம்மானந்தர், பிருந்தாவனத்தில் தியானத்தில் இருந்தார். அப்பொழுது ஒரு பக்தர் அங்கே வந்து, ஒரு விலையுயர்ந்த கம்பளத்தை அவர் முன் காணிக்கையாக வைத்தார். ஸ்வாமி பிரம்மானந்தர் ஒன்றும் கூறவில்லை. அவர் அமைதியாக நடந்தவற்றைக் கவனித்துக்கொண்டிருந்தார். இரண்டு மணி நேரம் கழித்து, அங்கு வந்த ஒரு திருடன், அவரருகில் வந்து அந்தக் கம்பளத்தை எடுத்துச்சொன்றான். ஆனால் ஸ்வாமி அதே அமைதியுடன் எந்த வித எதிர்ப்பும் காட்டாமல் கவனித்துக்கொண்டேயிருந்தார். அந்தக் கம்பளத்தைப் பெற்றதோ இழந்ததோ அவரிடம் எந்தவிதமான வித்தியாசத்தையும் ஏற்படுத்தவில்லை.

அதேபோன்று ரமண மகரிஷியைப் பற்றியும் ஒரு கதை உண்டு; ஒருநாள் ஆசிரமத்திற்குச் சில திருடர்கள் வந்தனர். அவர்கள் ஒரு துரும்பையும் விடாமல் எடுத்துச் சென்றதோடல்லாமல், செல்வதற்கு முன் அவருக்கு ஒரு உதையும் கொடுத்துவிட்டுச்சென்றனர். பகவான் எந்தவித எதிர்ப்பும் காட்டவில்லை என்பதுடன் இந்த நிகழ்ச்சியின்போது அவரது சுவாசத்தின் வேகத்தில்கூட ஒரு சிறு மாற்றமும் ஏற்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

அவர் இந்நிகழ்ச்சியினால் இம்மியளவு கூட பாதிக்கப்படவில்லை.

எப்பொழுது நாம் ஒரு வெறும் கவனிப்பவராக மட்டுமே ஆகிறோமோ, அப்பொழுது நம் மனம் நம் கைகளில் ஒரு கருவியாகிறது. பிறகு நாம் அதை

**ஆன்மீகம் 22**

விரும்பியபடி உபயோகித்துக் கொள்ள முடியும். இல்லாவிடில் நமது மனமானது, நம்மை அதன் அடிமையாக்கி விடும். உங்களால் உங்கள் மனதை தேவையான பொழுது மட்டும் உபயோகப் படுத்த முடியுமானால் நீங்கள் அதனை விடுவதற்கு[illegible] கள்! நீங்கள் [illegible]



எனவே, இந்த சில நாட்களில் எவ்வாறு நம் உணர்ச்சிகளைக் கையாண்டு நமது வாழ்க்கையைக் கவனிப்பவராக மாறுவது என்பதைக் காண்போம். எவ்வாறு, நாம் நம்மை நமக்குள்ளாக மையப்படுத்திக் கொண்டு வெளி விளிம்பில் இருந்து பாதிக்கப்படாத வகையில் செயலாற்றுவது என்பதைக் காண்போம்.

நமது விழிப்பற்ற தீர்மானங்களுக்குக் காரணமாக, மனப்பதிவு களற்ற ஒரு மனநிலையை எவ்வாறு உருவாக்குவது என்பதைக் காண்போம். எவ்வாறு நுண்ணறிவின் சக்தியை வெளிக்கொணருவது என்பதையும் எவ்வாறு விழிப்பற்ற நிலையிலிருந்து விழிப்பு நிலைக்கும், உயர் விழிப்பு நிலைக்கும் செல்வது என்பதையும் எவ்வாறு உள்ளுணர்விலிருந்து புத்திக்கும் நுண்ணறிவு நிலைக்கும் செல்வது என்பதையும் எவ்வாறு நமக்குள்ளிருக்கும் ஆனந்த ஊற்றை வெளிக்கொண்டு வருவது என்பதையும் காண்போம்.

பரமஹம்ஸ சுவாமி


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## டைனோ உலகம்


ஜுராசிக் பார்க் (Jurrasic Park) இந்தப் பெயர் தொண்ணூறுகளில் ஒருவித மிரட்சி கலந்த ஆச்சரியம் அளித்தது என்றால் அது மிகையில்லை. அது வரையில் ஒரு சிலருக்கு மட்டுமே பரீச்சயமாயிருந்த டைனோ சர்களை உலகம் முழுக்க அறியவைத்த பெருமை இயக்குநர் ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் (Steven Spielberg) அவர்களையே சாரும். இன்றும் டைனோசர்கள் என்றவுடன் இவரின் முகமும் நினைவில் வந்து போவது மறுக்க இயலா உண்மை.



Steven Spielberg with his creation

இருப்பினும், டைனோ உலகம் என்பது ஒரு கற்பனைக்கெட்டாத ஒரு மாயாஜால உலகம். இங்கு நீங்கள் கற்பனை பண்ணிப் பார்க்க முடியாத அளவு விசித்திரங்கள் கொட்டிக் கிடக்கின்றன, இந்த டைனோசர்களின் உலகத்தின் ஒரு மேலோ ட்டமான பார்வையே இந்தக் கட்டுரை.


உலகின் முதல் டைனோசர் ஏறத்தாழ 255 மில்லியன் வருடங்களுக்கு முதல் தோன்றியிருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது. மெசோஜோய்க் (Mesozoic) யுகம் (era) என்று அழைக்கப்படும் இந்த யுகம் மூன்று காலங்களாகப் (Periods) பிரிக்கப்படுகின்றது. அவை ட்ரியாஸ்ஸிக் (Triassic), ஜுரஸ்சிக் (Jurrasic) அன்ட் க்ரிடேசியெஸ் (Cretaceous) ஆகும்.




பிரதான யுகங்களும் அவற்றில் நடந்த பிரதான நிகழ்வுகளும்


பொதுவாக டைனோசர்கள் இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கப்படும். சொறிஸ்சியா (saurischia) என்று அழைக்கப்படும் வகை ஊர்வன இடுப்பு பகுதி (lizard hip) கொண்டவை. ஓர்ணிதிஸ்சியா (Ornithiscia) வகை, பறவை இடுப்பு (Bird hip) கொண்டவை ஆகும்.


க.கஜபதி
விரிவுரையாளர்,விலங்கியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்





Lizard hip and bird hip வேறுபாடு

சொறிஸ்சியா வகை டைனோசர்கள் தெரப்பொட் (THERAPOD) என்றும் சௌறபோட் (SAUROPOD) என்றும் இரு வகைப்படும். THERAPOD வகை இர ண்டு காலில் நடக்கும் மாமிச உண்ணிகள் ஆகும். இவை அநேகமான படங்களில் பயங்கரமான டைனோசர்களாகக் காட்டப்படும் விலங்குகள் ஆகும். உதாரணமாக Trex எனப்படும் Tyranosauras Rex மற்றும் Spinosaurus என்பன இவ்வகை டைனோசர்கள் ஆகும்.







Therapods




Therapod களின் அளவு வேறுபாடுகள

Sauropod வகை நான்கு கால்களில் நடக்கும் தாவர உண்ணிகள் ஆகும். இவை மிகப்பெரிய டைனோசர்கள். உதாரணமாக Brachiosauras,Aregtninosauras என்பவற்றைக் கூறலாம்.




**Sauropod க்களும் அவை வாழ்ந்த காலமும்**


ஓர்ணிதிஸ்சியாக்களும் இரண்டு வகைக்குள் அடங்கும். Thyreophora வகை கவசம் கொண்ட உடல் கொண்டவை. இவை தாவர உண்ணிகள் ஆகும். Stegosauras, Ankylosauras என்பன உதாரணங்கள் ஆகும்.



Thyreophora

Cerapods வகை டைனோசர்கள் பல விதமானவை. முகத்தில் கொம்பு கொண்ட Triceratops க்களும் பறவையின் கால் அமைப்பு கொண்ட Iguanadon உம் சில உதாரணங்கள் ஆகும்.





Triceratops and Iguaodon

இங்கு தரப்பட்டது ஒரு சில உதாரணங்கள் தான். wikipedia இல் டைனோசர்களின் பட்டியல் எடுத்துப் பார்த்தால் அவற்றின் பல்வகைமை புரியும். இத்தனை இத்தனை வகைகள் கொண்டு உலகை ஆட்சி செய்த ஒரு உயிர்க் கூட்டம் சுவடுகளில் மட்டும் வாழ்வது தான் இயற்கையின் நியதி எனும் போது மனிதர்களாகிய எமது ஆட்சிக் காலம் இன்னும் எத்தனை ஆண்டு களுக்கு என்ற எண்ணம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 118

In vivo என்றால் என்ன?

புதிர் 118 இற்கான விடைகளை 01.10.2014 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

திரு.க.கஜபதி
ஆசிரியர் பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர், விலங்கியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
P.D.BOX 57, திருநெல்வேலி.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.A.C.தவரஞ்சித்திடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்
மக்கள் வங்கி
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 117 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

செல்வி.பி.பிரசாந்தினி
வற்றாப்பளை,முள்ளியவளை,
முல்லைத்தீவு

**புதிர் 117 க்கான கேள்வியும் விடையும்:**

இலங்கையின் தேசிய பறவையின் விலங்கியல் பெயர் என்ன?

Gallus lafayettii


### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 118

சரியான விடை:-..................................................
முழுப்பெயர்:-..................................................
முகவரி:-..................................................
தொ.பே. இல:..................................................
கையொப்பம்:..................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

# 17.09.2014-15.10.2014



## மேடம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

**எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் பெற்ற மேட இராசி நேயர்களே!**

**மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறும் நேரம்!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது மாதத் தொடக்கத்தில் 8இல் சொந்த வீட்டில் செவ்வாய் சஞ்சரிக்கின்றார். அதைக் குரு பார்க்கும் விதத்தில் கிரக நிலைகள் இருப்பதால் குரு மங்கள யோகம் செயற்படப் போகின்றது. வீட்டில் நீண்ட நாட்களாக நடைபெறாத சுபகாரிய நிகழ்வுகள் இப்பொழுது நடைபெறும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும்.

ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு அருகிலிருந்து அப்போதைக்கு அப்போது ஆலோசனைகளை வழங்குவர். போட்டி, பொறாமைகள் அகலும். புதுமணத் தம்பதிகளாக மாறும் அமைப்பும் ஒரு சிலருக்கு கிடைக்கும். வீடு கட்டுவது குறித்த சிந்தனை வெகு நாட்களாக இருந்தாலும், அது கைகூடவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கும் இப்பொழுது அனுகூலமாக அமையப் போகிறது.

பக்கபலமாக இருப்பவர்கள் உங்களது பணத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பர். தக்கவிதத்தில் ஒருவர் இடம் வாங்கிக் கொடுப்பார். தைரியமும், தன்னம்பிக்கையும் குடும்பத்தினர் ஊட்டுவர். எதிர்பாராத விதத்தில் இல்லம் கட்டிக்குடியேறுகிற வாய்ப்பு வருகிறதே என்று மகிழ்ச்சியடையப் போகிறீர்கள்.

9, 12இற்கு அதிபதியான குருபகவான் உச்சம்பெற்று விளங்குகிறார். எனவே தந்தைவழி உறவில் நெருக்கம் ஏற்படும். பூர்வீகச் சொத்துக்களிலிருந்த குழப்பம் அகலும். பயணங்கள் அதிகரிக்கும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்கும் விதத்தில் தான் கிரக நிலைகளின் அமைப்பு இருக்கிறது.

தொழில் உத்தியோகத்தில் ஒரு சிலருக்கு இடமாற்றங்கள் வருவதற்கான அறிகுறிகள் தென்படும். சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனியின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் உடல்நலத்தின் காரணமாகவும், உடனிருப்பவர்களின் தேவைகளை முன்னிட்டும்வரும் மாற்றங்களை ஏற்றுக்கொள்ள மறுப்பீர்கள். சனியின் பார்வை ராசியில் பதிவதால் கூட்டு முயற்சிகளில் கொஞ்சம் விழிப்புணர்ச்சி தேவை. காக வாகனத்தானை கை கூப்பித் தொழுவதோடு காகத்திற்கு சோறிடுவது நல்லது.

**சுக்ரன் நீச்சம்பெறும் நேரம்!**

செப்டம்பர் 26 ஆம் திகதி கன்னி ராசிக்கு சுக்ரன் செல்கிறார். இது சுக்ரனுக்கு நீச்ச வீடாகும். சுக்ரன் வலிமை இழக்கும் இந்த நேரத்தில் வளர்ச்சியில் கொஞ்சம் தளர்ச்சி ஏற்படும். வழிபாட்டில் அதிக கவனம் செலுத்த வேண்டிய நேரமிது. குறிப்பாக 2, 7 இற்கு அதிபதி நீச்சம் பெறுவதால் பற்று வரவில் கடினம் ஏற்படும். கொடுக்கல்-வாங்கல்களில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். ஆதாயம் அதிகம் கிடைக்குமென்று நினைத்துச் செய்த காரியம் குறைவான ஆதாயத்தோடு கொஞ்சம் பிரச்சினையையும் ஏற்படுத்தும். எனவே இல்லத்தில் உள்ளவர்களையும், இணைந்து பணிபுரிபவர்களையும் அனுசரித்துச் செல்வது நல்லது.

**தனுசு செவ்வாயின் சஞ்சாரம்!**


அக்டோபர் 13 ஆம் திகதி தனுசு ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். ராசிநாதன் 9இல் குரு வீட்டில் சஞ்சரிப்பது யோகம்தான். தொழில் வளம் பெருகும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து புதிய ஒப்பந்தங்களை வரவழைத்துக் கொடுப்பர்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

8 இல் செவ்வாய் சஞ்சரித்து தொடங்கும் இம்மாதத்தில் விரயங்கள் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். புதனின் வக்ரகாலத்தில் திடீர் தன வரவு உண்டு. பகையான சொந்தங்கள் உறவாகும். கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். உத்தியோகத்திற்காக விண்ணப்பித்த பெண்களுக்கு அது கிடைப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கிறது. சனியின் பார்வை ராசியில் பதிவதால் ஆரோக்கியத்தில் மட்டும் கொஞ்சம் கவனம் செலுத்துங்கள். நவராத்திரி நாயகியை கொண்டாடி வழிபடுவதோடு, அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டினால் இன்பங்களை எதிர் கொள்ள நேரிடும்.

## மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறும் நேரம்!

# சிவல்புரி சிங்காரம்



## இடபம்

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்!**

**மனம் விட்டுப் பேசிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வல்லவர்களாக விளங்கும் இடப இராசி நேயர்களே!**

**வரன்கள் வாயில் தேடி வரும் நேரம்!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் ராசிநாதன் சுக்ரன் 4 ஆம் இடத்தில் சுகஸ்தானத்தில் சஞ்சரிப்பதோடு, சப்தமாதிபதி செவ்வாய் ராசியைப் பார்ப்பதால் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். எணணற்ற நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்.

உயர் பதவியில் இருப்பவர்கள் உங்களுக்கு பக்கபலமாக இருந்து உதவிக்கரம் நீட்டுவர். பாராட்டு மழையில், நனையும் விதத்தில் ஒருசில காரியங்களை முடித்துக் கொடுப்பீர்கள். கேது பலத்தால் உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு தொல்லைகள் உருவாகலாம். உடனுக்குடன் சாதாரண வைத்தியம் பார்ப்பதன் மூலம் ஆரோக்கியத்தைச் சீராக்கிக் கொள்ளலாம்.

தனாதிபதி புதன் உச்சம் பெற்றிருப்பதால் பண வரவு திருப்திகரமாக இருக்கும். தொழிலில், தேவைக்கேற்ப வருமானம் வந்து கொண்டே இருக்கும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். நேசமிக்க உறவினர்களின் பாச மழையில் நனைந்து ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். வியாபார விருத்தி அதிகரிக்கும். வேலையாட்களின் தொல்லை அகலும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சனியோடிருந்த செவ்வாய் விலகிவிட்டதால் இனி மேலதிகாரிகள் அனுகூலமாக நடந்துகொள்வர். தெம்பும், உற்சாகமும் கொண்டு திறம்பட வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். நம்பிக்கைக்குரியவர்கள் உங்களுக்கு நண்பர்களாக மாறி பொன், பொருள் குவிக்கவும் வித்திடுவார்கள்.

என்ன இருந்தாலும் ராகுகேதுக்களின் ஆதிக்கம் மேலோங்கி இருப்பதால் அதற்குரிய சிறப்பு பரிகாரங்களையும், சர்ப்ப சாந்திகளையும் செய்து கொண்டால் பொருளாதாரத்தில் வளர்ச்சி இருக்குமே தவிர தளர்ச்சி இருக்காது. எதிர்கால நலன் கருதி நீங்கள் தீட்டும் திட்டங்கள் வெற்றிகரமாக அமைய இறை வழிபாடு உங்களுக்குத் தேவை.

**நீச்ச சுக்ரன் நினைத்ததை செய்ய விடுமா?**

செப்டம்பர் 26ஆம் திகதி சுக்ரன் நீச்சம் பெறப்போகிறார். ராசிநாதன் நீச்சம் பெறுவது நல்லதல்ல. [illegible] வும் சுக்ரன் [illegible] ஒரு வழிக்கு சுக்ரன் நீச்சம் பெறுவது யோகம்தான். "விபரீத ராஜயோகம்" செயற்படும் இந்த நேரத்தில் திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். திறமை வெளிப்படும். உங்களை விட்டு விலகி இருக்கும் உற்றார் உறவினர்கள் இந்த நேரத்தில் வந்திணைவர். எனவே நீச்சம் பெற்ற சுக்ரன் நினைத்ததை முடிக்க வழிவகுப்பார்.

**தனுசு செவ்வாயின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 7, 12இறகு அதிபதியான செவ்வாய் அக்டோபர் 13ஆம் திகதி 8ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அஷ்டமத்துச் செவ்வாய் எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகளை உருவாக்கலாம். ஆரோக்கியப் பாதிப்புகளைக் கொடுக்குமே தவிர அன்றாட வாழ்க்கையில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது. இடம், பூமி வாங்கும் யோகம் ஒரு சிலருக்கு உண்டாகும். எல்லை மீறிச் சென்ற பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். புதனின் வக்ர காலத்தில் மட்டும் பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்படலாம். குழந்தைகளால் செலவுகள் உருவாகலாம். பெண்களின் பூப்புனித நீராட்டு விழா போன்ற சடங்குகளும் பெற்றோர்களின் மணிவிழா, முத்து வழா, பவள விழா போன்ற விழாக்களும் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இம்மாதம் செவ்வாய் தோறும் முருகப் பெருமானை வழிபட்டு வருவதோடு சனிக்கிழமை தோறும் விஷ்ணு வழிபாட்டிலும் ஆர்வம் காட்டுங்கள். வெற்றி நிச்சயம் வந்து சேரும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் உங்களுக்கு இனிய மாதம் தான். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். சிக்கல்களிலிருந்து விடுபட உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு. கணவன்-மனைவிக்குள் அன்பு கூடும். கனிவு பெருகும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கலாம் என்ற முடிவை குடும்பத்தினர் அறிவிப்பர். புதனின் வக்ர காலத்தில் மட்டும் புதிய கடன் சுமை உருவாகும். கோபத் தைக் குறைத்துக் கொண்டு செயற்படுவதன் மூலம் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள இயலும். நவராத்திரி நாயகிக்கு விரதமிருந்து அம்பிகையை வழிபாடு செய்வது நல்லது. (தொடரும்)

## எண்ணற்ற நல்ல வாய்ப்புகள் உங்கள் இல்லம் தேடி வரும்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பிரதமரை நியூயோர்க்கில் சந்திப்பாரா ஜனாதிபதி...?

வவுனியாவில் அண்மையில் நடந்த இலங்கைத் தழிழரசுக் கட்சியின் மாநாட்டின் ஒரு பகுதியாக நடந்த மத்தியகுழுக் கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நிகழ்த்திய உரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தைப் பலவீனப்படுத்துவதற்கு இந்தியா விருப்பம் கொண்டுள்ளதா என்ற கேள்வியை எழுப்ப வைத்திருக்கிறது.

புதுடில்லிப் பயணத்தின்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எமக்கு ஆரோக்கியமான ஆலோசனைகளை வழங்கினார். நீங்கள் சர்வதேசத்துடன் நெருங்கிப் பழகுங்கள், அதன் மூலம் மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தைப் பலவீனப்படுத்த முடியும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எமக்கு ஆலோசனை வழங்கினார் என்று குறிப்பிட்டிருந்தார் இரா. சம்பந்தன்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இப்படியொரு கருத்தைக் கூறியது ஆச்சரியமான விடயம்தான். ஏனென்றால், இன்னொரு நாட்டின் அரசியல் கட்சியுடனான சந்திப்பில் அந்த நாட்டின் அரசாங்கத்தைப் பலவீனப் படுத்துவது குறித்து வெளிப்படையாகப் பேசப்பட்டுள்ளது என்றால் அது முக்கியமானதாகவும் சற்று விவகாரமானதுமான விடயம்தான்.

இந்தியப் பிரதமர் கூறாத ஒரு கருத்தை இரா.சம்பந்தன் பகிரங்கமாக வெளியிட்டிருக்கமாட்டார். எனவே, இது உண்மையான கருத்தா என்று ஆராய வேண்டியதில்லை. இந்தியப் பிரதமரைச் சந்திக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆரம்பத்தில் 30 நிமிடங்களே ஒதுக்கப்பட்டபோதும் இந்தச் சந்திப்பு கிட்டத்தட்ட ஒன்றரை மணிநேரம் நீண்டிருந்தது.

அதுவே இந்தச் சந்திப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டியிருந்தது. அதைவிட சந்திப்பில் பேசப்பட்ட எல்லா விடயங்களையும் வெளிப்படுத்த முடியாது என்றும், அதனை நாமும் வெளிப்படுத்த மாட்டோம், இந்தியாவும் வெளிப்படுத்தாது என்று சந்திப்பில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்திருந்தார்.

எனவே, வெளிப்படையாகக் கூற முடியாத- பகிரங்கப்படுத்தப்பட முடியாத விடயங்கள் குறித்து பேச்சு நட்த்தப்பட்டுள்ளது என்பதை உணர முடிகிறது. சர்வதேச சமூகத்துடன் நெருங்கிச் செயற்படுவதன் மூலம் மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தைப் பலவீனப் படுத்த முடியும் என்ற ஆலோசனை எத்தகைய கட்டத்தில் வெளியிடப்பட்டது என்று தெரியவில்லை.

அதாவது, தனியே இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்தியப்பிரதமர் அவ்வாறு குறிப்பிட்டாரா அல்லது பொதுவான அரசியல் நிலை குறித்து விபரிக்கும் போது அவ்வாறு தெரிவித்தாரா என்றும் பார்க்க வேண்டும்.

இனப்பிரச்சினைத் தீர்வு விடயம் குறித்துப் பேசும்போது மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தைப் பலவீனப் படுத்துவதற்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆலோசனை கூறியிருந்தால் அது இலங்கை அரசாங்கத்தை இறுக்கமான போக்கிலிருந்து படியிறங்கச் செய்வதற்கான முயற்சி என்று எடுத்துக்கொள்ளலாம்.



பொதுவான அரசியல் சூழல் பற்றி பேசும்போது அவர் அவ்வாறு குறிப்பிட்டிருந்தால் மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தைப் பதவி இறக்குவதற்கான முயற்சி என்று எடுத்துக்கொள்ளலாம். எது எவ்வாறாயினும் கடும்போக்கிலிருந்து இறங்குவதற்கு- மகிந்த ராஜபக்ச அரசைப் பலவீனப்படுத்துவதற்கு இந்தியாவும் விரும்புகிறது என்பதற்கான ஒரு சமிக்ஞையாகவே இதனை எடுத்துக்கொள்ளலாம்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வலியுறுத்தியபோதிலும் அதற்கு இலங்கை அரசாங்கத்திடமிருந்து முறையான பதில் ஏதும் வரவில்லை. அதுமட்டுமன்றி அதிகாரப்பகிர்வு அரசியல் தீர்வு விடயங்களிலும் இந்தியாவின் கருத்தை இலங்கை அரசாங்கம் மதிக்கவில்லை.

இது இந்தியாவுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. அதைவிட 18 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் வரையறையின்றி விரிவுபடுத்தப்பட்டதையும் இந்தியா வரவேற்கவில்லை. இத்தகைய பின்னணியில் 3 ஆவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குறித்து இந்தியாவுக்கு அதிருப்தி எழுந்துள்ளதாகவே தெரிகிறது. நரேந்திரமோடி அரசாங்கம் பதவியேற்று மூன்றரை மாதங்களாகிவிட்ட நிலையில் இலங்கையிடம் நெருக்கமான தொடர்புகளை இன்னமும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை.

இந்தியப்பிரதமர் நரேந்திரமோடி தனது முதல் வெளிநாட்டுப் பயணத்தை இலங்கைக்கே மேற்கொள்வாரென்று முதலில் நம்பப்பட்டது.

அவர் நேபாளம், பூட்டான், பிரேசில், ஜப்பான் என்று சுற்றிவந்துவிட்டபோதிலும் அயல்நாடான இலங்கையை இன்னமும் திரும்பிப் பார்க்கவில்லை. அதுபோலவே இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் பதவியேற்ற பின்னர் பல நாடுகளுக்குச் சென்றுவிட்டார். கடந்தவாரம் கூட அவர் ஆப்கானிஸ்தான் சென்றிருந்தார். சார்க் நாடுகளில் அவர் இன்னமும் பயணத்தை மேற்கொள்ளாத நாடுகள் என்றால் இலங்கை, மாலைதீவு, பாகிஸ்தான் இந்த மூன்றும்தான் எஞ்சியிருக்கின்றன.

இது பாகிஸ்தானுக்கான பயணம் என்பது இலகுவாக திட்டமிடப்படத்தக்கதொன்று அல்ல. மாலைதீவு, இலங்கை இந்த இரண்டு நாடுகளுக்கும் தான் சுஸ்மா சுவராஜ் இன்னமும் பயணிக்கவில்லை. எதற்காக இலங்கைக்கு வர சுஸ்மா சுவராஜ் தயங்குகிறார் என்பது முக்கியமான கேள்வி. வரும் டிசெம்பர் மாதமே கொழும்பு வரலாம் என்று தகவல்கள் வெளியாகின்றன.

மிக அருகிலுள்ள நாடாக இருந்தாலும் இலங்கையை இந்தியா சற்று எட்ட வைத்துக்கொள்ளவே முனைகிறது என்பதை அண்மைய அரசியல் நடப்புகளிலிருந்து உணர முடிகிறது. அதுபோலவே இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியும் கூட கொழும்புக் கான பயணத்தை எதிர்பாரக்க முடியாது போலுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியும் இதுவரை ஒருமுறையே சந்தித்துப் பேசியுள்ளனர். அதுவும் பதவியேற்பு விழாவுக்கு மறுநாள் நடந்த மரியாதை நிமித்தமான சந்திப்பு. அது வெறும் 20 நிமிடங்கள் வரையே நீடித்திருந்தது.

ஆனால், தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடனான பேச்சுக்களுக்கு 1.30 மணி நேரத்தை செலவிட்டிருந்தார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி. அதனுடன் ஒப்பிடும்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடனான சந்திப்புக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்றே கருதலாம்.

இம்மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாகும் ஐ.நா பொதுச்சபையின் பொதுவிவாதத்தில் உரையாற்ற இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் நியூயோர்க் செல்கின்றனர். இதன் போது இந்தியப் பிரதமரை சந்திக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார். அதனை அவரே வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்.

ஆனால் இந்தியப் பிரதமரைச் சந்திப்பதற்கு இன்னமும் நேரம் ஒதுக்கப்படவில்லை. நேரம் ஒதுக்கப்படுமா? சந்திப்பு நடக்குமா? என்பது சந்தேகமே.

முதலாவது- சந்திப்பை இந்தியப் பிரதமர் விரும்புகிறாரா என்பது முக்கியமானது.

இரண்டாவது- நரேந்திரமோடி நியூயோர்க்கில் இறுக்கமான நிகழ்ச்சி நிரலைக்கொண்டிருக்கிறார். எனவே, அயல்நாட்டுத் தலைவரான மகிந்த ராஜபக்சவை நியூயோர்க்கில் சந்திக்க நேரம் ஒதுக்குவதற்கு இந்தியத் தரப்பு தயங்கலாம்.

கடந்த ஆண்டு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்கக் காத்திருந்துவிட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஏமாற்றத்துடன் திரும்பியது இங்கு நினைவுகூறத்தக்கது.

13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தல், தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணல், மீனவர்களின் பிரச்சினையைத் தீர்த்தல் இந்த விடயங்களின் இலங்கை அரசின் தீர்க்கமான நடவடிக்கைகளை இந்தியா எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது. இதற்கான முன்முயற்சிகள் எடுக்கப்படாத நிலையில் உயர் மட்டச் சந்திப்புக்களை இந்தியா கூடிய விரைவில் தவிர்த்துக் கொள்ளப் பார்க்கிறது. ஆனால், அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடக்கும் என எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலில் இந்தியாவின் ஆதரவை உறுதிப்படுத்திக்கொள்ள மகிந்த ராஜபக்ச தரப்பு நிச்சயம் முயற்சிக்கும்.

ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தல் மற்றும் அரசியல் நிலவரங்கள் தொடர்பாக கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தினால் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

அது இந்தியாவின் ஆதரவு, யாருக்கு என்பதை தீர்மானிக்கும் என்றும் கூறப்பட்டது.

தம்முடன் இணைந்து செயலாற்றும் ஒருவர் அயல்நாட்டில் தலைமைப் பதவிக்கு வருவதையே இந்தியா மட்டுமல்ல, எந்தநாடுமே விரும்பும். மகிந்த ராஜபக்ச அவ்வாறானதொரு தலைவராக இருந்திருந்தால் இந்தியா அவரது அரசாங்கத்துடன் இன்னும் நெருக்கமாகியிருக்க வேண்டும்.


இத்தகைய பின்னணியுடன் பார்க்கும் போது இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை அரசாங்கத்தை பலவீனப்படுத்துவதற்கு கூறிய ஆலோசனையை குறைத்து மதிப்பிட முடியாதுள்ளது.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிழிந்த காலணியுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட அமைச்சர்





சீன ஜனாதிபதி சி ஜின்பிங் முன்னிலையில் கலை மற்றும் கலாசார அமைச்சர் டி.பி.ஏகனாயக்க அணிந்திருந்த பாதணி சேதமடைந்திருந்தமையினால் அவர் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கு வருகை தந்த சீன ஜனாதிபதி மற்றும் சீன இராஜதந்திரிகளுடன் அமைச்சர் டி.பி.ஏகனாயக்க ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்ட போது ஒரு சிலரின் கண்கள் அமைச்சர் அணிந்திருந்த காலணியை நோக்கியவாறே இருந்தன.

அமைச்சர் அணிந்திருந்த காலணி கிழிந்து, அமைச்சரின் கால் விரல்கள் வெளியே காணப்பட்டமையே இதற்கு காரணமாகும்.இந்த செய்தி இலங்கையில் மாத்திரம் இன்றி பல வெளிநாடுகளிலும் பரவியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (இ)

# சீனா இலங்கைக்கு வழங்கிய கடனை நிதியுதவி என்றே கருத வேண்டுமாம்

## கடனுக்கு அமைச்சர் பந்துல புதுவிளக்கம்



(கொழும்பு)

சீனா இலங்கைக்கு வழங்கியது கடன் தான். ஆனால் அக் கடன் சலுகை அடிப்படையில் வழங்கப்பட்டதால் அதனை நிதியுதவி என்றே அழைக்க வேண்டும் என கடனுக்கு புதியதொரு விளக்கத்தை அமைச்சர் பந்துல குணவர்த்தன வெளியிட்டுள்ளார்.

வல்லரசான அமெரிக்காவே 7 ரில்லியன் டொலர் கடனாளி நாடாகும். அதற்காக அந்நாடு பொருளாதாரத்தில் பின்னடைவைத் கண்டுள்ளதாக கூற முடியுமா? என்றும் அமைச்சர் கேள்வி எழுப்பினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஐக்கிய சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அமைச்சர் பந்துல குணவர்த்தன இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை இப்போது வறுமைக் கோட்டிலுள்ள நாடல்ல. மத்திய தர வருமானம் கொண்ட நாடாகும்.

எனவே, எமக்கு கடன் வழங்கப்படுவதில்லை. நிதியுதவிகளே வழங்கப்படுகின்றன.

சீன ஜனாதிபதி இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டு அபிவிருத்திகளுக்காக குறைந்த வட்டியில் நீண்ட கால திருப்பிக்கொடுக்கும் விதத்தில் பல்வேறு சலுகைகள் மூலமே கடன் வழங்கப்பட்டது.

எனவே, இதனை கடன் என அழைக்க முடியாது. சலுகை அடிப்படையில்வழங்கப்பட்டதால்அதனை நிதியுதவி என்றே அழைக்க வேண்டும்.

எமது பூமியை நாம் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யவில்லை. இலவசமாக வழங்குகின்றோம். அதில் முதலீடுகளை வெளிநாடுகள் மேற்கொள்கின்றன. அதன் மூலம் எமது நாட்டுக்கு வருமானம் கிடைப்பதோடு பொதுமக்களுக்கு தொழில் வாய்ப்புக்களும் கிடைக்கின்றன.

வல்லரசான அமெரிக்காவே 7 ரில்லியன் டொலர் கடனாளி நாடாகும். அதனால், அந்நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டதா.

அத்தோடு அமெரிக்கப் பிரஜையொருவர் ஒரு மணித்தியாலத்திற்கு 38 டொ்லர் கடனாளியாக ஆக்கப்பட்டுள்ளார்.

அது மட்டுமல்ல, அமெரிக்காவிலுள்ள வங்கிகளின் பங்குகளை சீனாவே கொள்வனவு செய்கின்றது.2020 ஆம் ஆண்டு அமெரிக்காவின் பொருளாதாரத்தை மிஞ்சும் சீனாவுடன் நாம் நட்புறவு வைத்திருப்பதென்பது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ராஜதந்திர கொள்கைக்கு கிடைத்த வெற்றியாகும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்தார். (இ)

# சீன ஜனாதிபதியின் விஜயத்தால் இந்திய உறவில் விரிசல் இல்லை

## அமைச்சர் யாப்பா விளக்கம்

சீன ஜனாதிபதியின் இலங்கை விஜயம் நாட்டுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். சீன ஜனாதிபதியின் விஜயத்தால் இந்தியாவுடனான எமது நட்புறவு பாதிக்கப்படவில்லை என்பதை அவரது இந்திய விஜயம் உறுதிப்படுத்தியுள்ளது என அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

பல வர்த்தக உடன்படிக்கைகள் சீனாவுக்கும் இலங்கைக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளன. அம்பாந்தோட்டை துறைமுகத்தை மேலும் அபிவிருத்தி செய்யவும், நுரைச்சோலை மின் நிலையத்தின் மூன்றாம் கட்டப் பணிகளை ஆரம்பிப்பதற்கும், கொழும்புத் துறைமுக நகரை அமைப்பதற்கும் இணக்கப்பாடுகள் காணப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் மேற்படி விடயங்களைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில,

சீன ஜனாதிபதியின் இலங்கை விஜயத்தால் இந்தியாவுடனான எமது நட்புறவு விரிசலடையும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றம்சாட்டியது. ஆனால், இங்கு விஜயத்தை முடித்துக் கொண்ட சீன ஜனாதிபதி தனது அடுத்த பயணத்தை இந்தியாவுக்கு மேற்கொண்டார்.

இதன்மூலம் ஐக்கிய தேசியக் கட்சியின் குற்றச்சாட்டு தகர்த்தெறியப்பட்டுள்ளதோடு, இந்த விஜயத்தால் இந்தியாவுடனான எமது உறவில் எவ்விதமான பாதிப்பும் இல்லை என்பதும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

5 பில்லியன் டொலர் பெறுமதியான வர்த்தக உடன்படிக்கைகள் இரு நாடுகளுக்கிடையே கைச்சாத்திடப்பட்டுள்ளன. துறைமுக நகருக்காக சீனாவுக்கு 500 ஏக்கர் கடற்பரப்பு வழங்கப்பட்டுள்ளது.

இங்கு நகரத்தை சீனாவே அமைக்கின்றது. இதன் மூலம் தொழில் வாய்ப்புக்கள் எம்மவர்களுக்குக் கிடைக்கும். அதுமட்டுமன்றி நாட்டுக்கு வருமானமும் கிட்டும். சீன ஜனாதிபதியின் இவ்விஜயத்தின் மூலம் நாட்டுக்குப் பல நன்மைகள் கிடைத்துள்ளன. அதன் அடிப்படையிலேயே மின்கட்டணம் குறைக்கப்பட்டது. எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டன. எதிர்க்கட்சியினர் கூறுவது போன்று இது தேர்தலுக்காக அரசு நடத்தும் நாடகமல்ல பல காலமாக ஜனாதிபதி திறைசேரியுடன் நடத்திய பேச்சுகளை அடுத்து மக்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளே இவையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# இன்று ஒரு தகவல்

## உயிர் கம்பியூட்டர்

''நான் கணக்கில் ரொம்ப வீக் சேர்'' என்று சொல்லிக் கொள்வதில் நம்மில் பலர் வெட்கப்படுவதில்லை.

நம்முடைய மூளை கணக்குப்போட எப்பொழுதும் தயாராகத் தான் இருக்கிறது. ஆனால், அதை நாம் சரியாக உபயோகப்படுத்துவதில்லை.

அது தான் விடயம்.

கம்பியூட்டர் வந்தபின் இன்னும் சௌகரியமாகப் போய் விட்டது. கணக்குப் பார்க்கும் வேலையெல்லாம் அதனிடம் ஒப்படைத்து விட்டோம்.

கம்பியூட்டரை விட வேகமாக மனிதனால் கணக்குப் பார்க்க முடியுமா! முடியும்.

ஆனால், முடியும் என்று நிரூபித்துக் காட்டியவர்கள் இந்த உலகத்திலேயே ஒரு பத்து... இருபது பேர்தான் இருக்கிறார்கள். ஒரு பென்சிலோ காகிதமோ இல்லாமல் 17 இலக்க எண்களைக் கூட கூட்டிக்கழித்து – பெருக்கி வகுத்தார்கள்.

நீங்கள் பிறந்ததிலிருந்து இந்த விநாடி வரைக்கும் எவ்வளவு காலம் ஆகியிருக்கிறது என்று கேட்டால் அதை நொடிகளில் சொல்கிறார்கள்.

ஒரு புத்தகத்தை கொடுத்துப் படிக்கச் சொல்லி...

அதில் மொத்தம் எத்தனை எழுத்து என்று கேட்டால் சரியாகச் சொல்கிறார்கள்.

இப்படிப்பட்ட திறமைசாலிகள் இந்த உலகத்தில் இருக்கத் தான் செய்கிறார்கள். அதுசரி அவர்களால்மட்டும் அது எப்படி முடிகிறது?

இதற்குச் சரியான விளக்கத்தை இதுவரைக்கும் யாரும் சொல்லவில்லை.

இந்தக் கணக்குப்புலிகள் – கணித மேதைகள் எப்படி அவ்வளவு பெரிய கணக்கெல்லாம் போடுகிறார்களென்று கேட்டால் அதற்கு யாராலும் சரியான விளக்கம் கொடுக்க முடியவில்லை. ஆனால், அவர்களெல்லாம் கணக்குப் போட்டு சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவுக்கும் அவர்கள் கணிதத்தை முறையாகக் கற்றுக் கொண்டவர்களா? என்று கேட்டால் அதுவுமில்லை.

சோவியத் ஆய்வாளர் (kamyshove) ஒருத்தர் முதல் தடவையாக இது சம்பந்தமான ஆச்சரியமான ஒரு முடிவைச் சொல்லியிருக்கிறார்கள். அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? கம்பியூட்டர்களையே தோற்கடிக்கக் கூடிய வேகத்தில் கணக்குப் போடும் திறமையுள்ள மூளை இயற்கையிலேயே சில பேருக்கு மட்டும் தான் இருக்கிறது என்பதில்லையாம். இந்த உலகத்தில் பிறந்த எல்லோருடைய மூளைக்குள்ளேயும் ஒரு கம்பியூட்டர் மூளை இருக்கிறது என்கிறார் அவர்.

நம்மிடமுள்ள சாதாரண மூளைக்கே அபாரமான திறமை இருக்கிறது சேர்.இப்பொழுது உதாரணத்துக்கு...

ஒரு மரத்தின் உச்சிக் கிளையில் ஒரு நல்ல மாங்காயைப் பார்க்கிறோம். ஒருகல்லை எடுத்து குறிபார்த்து வீசுகிறோம். ஒரு தடவை இல்லாவிட்டாலும் இன்னொரு தடவை சரியாகப் பார்த்து அடித்து விடுகிறோம்.

மாங்காய் கைக்கு வந்து விடுகிறது. இது சாதாரணமாக எல்லோரும் செய்யக்கூடிய ஒரு காரியம். இதில் கவனிக்க வேண்டியது என்னவெனில்.

கண்ணிமைக்கும் நேரத்துக்குள் மனித மூளை கல்லின் எடை, மாங்காய் இருக்கும் உயரம், தூரம்,எறிய வேண்டிய விசையின் அளவு எல்லாவற்றையும் கணக்குப் போட்டு சொல்லி விடுகிறதே.

அதற்குப்பின்தானே கல்லை வீசுகிறோம். நம்மையறியாமலே நமக்குள் நடக்கும் ஒரு அதிசயமிது.

மனிதன் படைத்த கம்பியூட்டரால் இவ்வளவு சிக்கல் நிறைந்த விடயத்தை இவ்வளவு சீக்கிரத்தில் கணக்குப் போடமுடியாது?

அதனால் மனித மூளைக்குள் ஒரு கம்பியூட்டர் முறை அதாவது கணக்குப்போடும் மூளை இயங்குகிறது என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

இதை உயிர் கம்பியூட்டர் (Bio computer) என்று சொல்லலாம்.

இயற்கை என்ன செய்திருக்கிறது என்றால்... இந்த உயிர்க் கம்பியூட்டர் விசையை அணைத்து விட்டு, உணர்வு மூளை யின் (consious mind) செயற்பாட்டை திறந்து விட்டிருக்கிறது. அதனால் உணர்வு மூளையை உபயோகிக்கும் மனிதன் தன்னுடைய இயற்கைத்திறமையை மறந்து, தானே வளர்த்துக்கொண்ட திறமையின் மூலமாக சிந்திக்க ஆரம்பித்தான். இயற்கையின் உயிர்க் கம்பியூட்டர் விசை அணைக்கப்படாமல் சிலபேருக்கு இருந்து விடுகிறது. அவர்கள்தான் கணித மேதைகள். அவர்களுக்கெல்லாம் உயிர்க் கம்பியூட்டருக்கும் உணர்வு மூளைக்கும் தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தொடர்பை எல்லோருக்கும் ஏற்படுத்துவதற்கு ஒரு வழியைக் கண்டு பிடித் துவிட்டால் அதன்பின் நாம் எல்லோரும் கணித மேதைகள் தான்.

கணக்குப் புலிகள்தான். அது வரைக்கும் நாம் இப்படியே இருந்துவிடுவோம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனங்களுக்கிடையில் பரஸ்பர ஒத்திசைவே இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வாகும்



**பரஸ்பர அனுசரிப்பே தொடர்ந்தும் தீர்வுக்கான தாரக மந்திரம் எனும் தலைப்பில் சண்டே லீடரில் என். சத்தியமூர்த்தி எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை வெளியானது. அதன் தமிழாக்கம் இங்கே பிரசுரிக்கப்படுகின்றது.**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளைச் சேர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையான 41 பேர்களில் 33 பேர் ஐ.நா.ம.உ.சபையின் விசாரணை ஆண்டினை 1974 என பின்னோக்கி சீர்செய்யக் கோரும் மகஜர் ஒன்றில் கையெழுத்திட்டிருந்தது பற்றி அண்மை யில் வந்த ஊடக அறிக்கை யொன் றில் கூறப்பட்டிருந்தது.

விடயங்களில் உலகிற்கு நம்பிக்கை ஏற்படவேண்டுமென விரும்பிய காரணத்தால் 1975 இல் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குப் பலியான அப்போதைய யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பாவின் மரணம் நிகழ்ந்த கால கட்டத்தையும் உட்படுத்தும் விதத்திலேயே அம்மகஜர் அமைந்திருந்தது.

ஆனாலும் அக்காலகட்டம் இந்திய அமைதிப் படை இலங்கையில் சேவை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த காலகட்டத்தையும் உள்ளடக்கியதாகவே இருந்தது. இது அக்காலகட்டத்தில் இந்திய அமைதிப் படை நடவடிக்கைகளின் நிகழ்வுகள் (1987-89) மட்டில் ஐ.நா.ம.உ.ச விசாரணை ஒன்றினை அப்போது வேண்டியிருந்த சிங்கள பௌத்த கடும்போக்கு தீவிரவாதிகளின் கோரிக்கை அல்ல.

ஐ.நா. ம.உ ஆணைக்குழு தலைமைப் பதவியில் பிள்ளையவர்களின் கடைசி நாட்களாக அது இருக்கையில் உள்நாட்டிலும் அயலிலும் தனக்கு ஏற்படக்கூடிய அரசியல் ரீதியான சங்கடங்களை தவிர்த்துக்கொள்வதற்கான தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முயற்சியா அல்லது முதலமைச்சர் தலைமையையும் கட்சியின் பெருந்தலைமைத்துவத்தையும் மீறிய ஒரு வளர்ச்சியா என்பது பற்றி எதுவித தெளிவும் இல்லை.

ஐ.நா.ம.உ.சபைக்கான அந்த மகஜரில் கையெழுத்திட்டிருந்த 33 தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு உறுப்பினர்களுள் ஐவர் வடபகுதியைச் சேர்ந்த கட்சி ஆலோசகர் பதினொரு பேர் கொண்ட குழுவைச் சேர்ந்தவர்கள். எஞ்சிய 28 பேர்களும் மாகாண சபையின் 38 உறுப்பினர்களில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு சார்பான 30 பேர்களில் அடங்குபவர்களேயாவர்.

அதாவது முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் சபைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தவிர்ந்த தமிழ்த்தேசியக்கூட்டமைப்புச் சபை அங்கத்தவர்கள் அனைவருமே ஐ.நா.ம.உ.சபைக்கான அந்த மகஜரில் கையெழுத்திட்டிருந்தனர் என்பதற்கான அறிகுறிகள் தெளிவாகவேயுள்ளன.

இவ்விடயங்கள் அனைத்தும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை எங்கே கொண்டுபோய் நிறுத்துகின்றன?

என்பதே கட்சியின் தோழர்கள், நலன் விரும்பிகள் மற்றும் அது பிரதி நிதித்துவப்படுத்தும் சொந்த மக்கள் அனைவரும் கேட்கும் கேள்வியாகவே இருக்கும். இந்த நிகழ்வுகளுக்குப் பின்னாலும் இதுபோன்ற ஏனைய நகர்வுகளுக்குப்பின்னாலுமிருந்துகொண்டு வடமாகாண சபையின் உள்ளேயும் வெளியேயும் சுதந்திரமாகவே செயற்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்சித் தலைமைத்துவத்தின் அறிவுக்கப் பாற்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடும் சக்திகளின் மறைமுகமான பலத்தைக் கருத்திற்கொண்டு பார்த்தால் இனப்பிரச்சினை சிக்கல்களிலிருந்து விடுவித்து வெற்றிகொள்ளும் ஆற்றல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருக்குமா என்று எண்ணவே தோன்றுகின்றது.

எந்தவொரு பேச்சுவார்த்தை வழிமுறைகளிலும் பங்குபற்றி செயலாற்றவேண்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்களது மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் காரணமாக அவர்கள் தமிழ்மக்கள்மீது கொண்டிருக்கும் கடப்பாடுகளுக்கேற்ப திறமையாகச் செயற்பட்டு பெறுமதியான தீர்வொன்றை பெற்றுக் கொடுக்கக் கூடியவர்களாக இருப்பார்களா என்ற ஒரு கேள்வி மக்களது மனதின் ஒரு மூலையில் எப்போதுமே இருந்துகொண்டேயிருக்கும்.

இந்தியா என்று கூறாவிடினும் இந்தியர்களாக இருக்கக் கூடிய எவருமே இதற்கு விதிவிலக்காக இருந்துவிடவும் முடியாது. ஏனென்றால் கடந்த காலத்தில் இடம்பெற்ற இந்தவிதமான செயற்பாடொன்று இலங்கையையும் இவர்களில் சிலரையுங்கூட காத்திருந்த புலிகளின் கைகளுக்குள் வழிநடத்திச் சென்றிருந்தது என்பதை இவர்கள் எல்லோரும் அறிந்தே இருக்கிறார்கள். இது இல்லையென்று மறுத்துவிட முடியாதளவிற்கு அடிக்கடி இடம் பெற்றேயுள்ளது. இலங்கையின் எந்தவொரு அரசும் சிங்கள கடும்போக்கு தீவிரவாதிகளை பிரதிநிதித்துவப்படுத்தவேண்டியதேவை தமக்கு இல்லை என்ற உள்ளார்ந்த விழிப்புணர்வினை எப்போதாவது பெற்றுக்கொள்வார்களெனின் அதேவிதமான ஓர் அதிகரித்த உணர்வு தமிழ்மக்களுடன் அவர்களது தலைவர்கள் மத்தியிலும் உருவாகி எழுச்சி பெறும் ஓர் உண்மையாக வெளிப்படும் எனலாம்.

தமிழர் தலைமைத்துவம் என்பது தமிழ் மக்கள் அனைவரையும் ஒழுங்கான ஓரணியில் ஒன்று திரட்டி சரியான வழியில் செயற்படுத்த வேண்டும் எனும்போது தமிழீழவிடுதலைப்புலிகள்தலைவரோ வென்றல்அதனையொத்த பங்காளிகளிலும் பார்க்க கூடுதலான தவறுகளுக்கு அடிக்கடி இட்டுச் சென்றுள்ளார்.! (முற்றும்)

தமிழில் - **யோகர்**

# அனுமதியின்றி காட்டுமரங்களினை வெட்டிய நபருக்கு விளக்கமறியல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பூநகரி பகுதியில் அனுமதியின்றி காட்டு மரங்களை வெட்டிய சந்தேகநபரை எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதவான் எம்.ஐ.வகாப்தீன் நேற்று முன தினம் உத்தரவிட்டார்.

மேற்படி சந்தேகநபர், கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூநகரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் மறுநாள் புதன் கிழமை ஆஜர்படுத்தப்பட்டார.

இதேவேளை, பளைப் பகுதி யில் 1/2 போத்தல் கசிப்புடன் பிடிக்கப்பட்ட 4 நபர்களுக்கு நீதவான் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

மேற்படி நபர்கள் கடந்த 14ஆம் திகதி கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டனர். இதன்போது, நால்வரும் தங்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். இதனையடுத்து, நீதவான் அபராதம் விதித்தார். (2)

# நர்த்தனாஞ்சலி நடன நிகழ்வு

(குருமன்காடு)

வடமாகாணத்தில்உள்ளூர் நுண் கலை மாணவர்களுக்கும் கலைஞர்களுக்கும் களம் அமைத்துக்கொடுக்கும் நோக்கில் யாழ்.இந்தியத் துணைத்தூதர கம் இந்திய கலாசார அமைச்சின் அனுசரணையுடன் கலை நிகழ்வுகளை நடத்தி வருகிறது. இதன்படி இவ்வருடமும் நான்கு கலை நிகழ்வுகளை நடத்தத் தூதுகம்ஒழுங்குசெய்துள்ளது.

இதற்கமைய முதலாவது நிகழ்வுயாழ். இந்திய துணைத் தூதரகமும் நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியும் இணைந்து வழங்கும் மாபெரும் நடன நிகழ்வான நர்த்தனாஞ்சலி நாளை மறுதினம் பிற்பகல் 4 மணிக்கு வவுனியா நகர சபை புதிய கலாசார மண்டபத்தில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். கௌரவ விருந்தினராக இந்திய பதில் துணைத்தூதுவர் சுதர்ணாமூர்த்தி, சிறப்பு விருந்தினர்களாக வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ச.மோகநாதன், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப் பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-25ம்)

# காலநதியின் கற்குழிவு சிறுகதைத் தொகுப்பு வெளியீடு

யாழ்ப்பாணம் வாழ் 40 எழுத்தாளர்களின் காலநதியின் கற்குழிவு எனும் சிறுகதை தொகுப்பு வெளியீடும் அவை 50 வருகையாளர்களின் கௌரவிப்பும் நாளை மறுதினம் 21ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அல்வாய் கலையகத்தில் சாகித்திய ரத்னா தெணியான் தலைமையில் இடம்பெறவுள்ளது. (இ


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி லோகிதாசன் ஜீவராணி (ஜீவா)

தோற்றம் 1.06.1972 மறைவு 01.10.2013

திதி:-புரட்டாதி அபரபக்க துவாதசி, 20.09.2014 சனிக்கிழமை

குடும்பத்தின் ஒளி விளக்காய் அன்பின் இருப்பிடமாய் நற்பண்புகளுடன்
நம் வாழ்வுக்கு வழிகாட்டிய எம் அன்புத் தெய்வமே
ஆண்டொன்று ஆன போதும் ஆறவில்லையே எம்மனது!

நாளை 20.09.2014 சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வல்லை வீதி,
தொண்டைமானாறு.

என்றும் உன் நினைவுடன்
குடும்பத்தினர்.

(7624)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாக்.கராச்சியில் 7 தீவிரவாதிகள் சுட்டு படுகொலை

(கராச்சி)

பாகிஸ்தான் நாட்டின் மிகப்பெரிய நகரமான கராச்சியில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறிப்பிட்ட வீட்டை பொலிஸார் முற்றுகையிட்டனர்.

அப்போது பொலிஸான்ர நோக்கி தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர். பதிலுக்கு பொலிஸாரும் தாக்குதலை தொடங்கினர். இரு தரப்புக்கும் இடையே நடைபெற்ற கடும் மோதலில் பின் ஏழு தீவிர வாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டதாக சிரேஷ்ட காவல் கண்காணிப் பாளரான மாலிர் ராவ் அன்வர் கூறியுள்ளார். சுட்டுக்கொல்லப்பட்ட அனைவரும் தடை செய்யப்பட்ட தீவிரவாத இயக்கத்தை சேர்ந்த சந்தேக நபர்கள் ஆவார்கள். அவர்களிடமிருந்து ஏராளமான ஆயுதங்களும, வெடி பொருட்களும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட துப்பாக்கி குண்டுகளும் கைப்பற றப்பட்டுள்ளன.

சிந்து மாகாணத்தில் உள்ள ஐதராபாத் மற்றும் கராச்சியை இணைக்கும் பிரதான வீதியை ஒட்டியுள்ள ஆப்கான் பாஸ்தி என்ற இடத்தில் தான் இத்தீவிரவாதிகள் தங்கியிருந்ததாக அதிகாரி மாலிக் மேலும் கூறினார். கடந்த மாதம் கூட அதே பகுதியில் 6 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். நேற்றைய தினம் நடந்த மோதலை அடுத்து கராச்சி நகரம் முழுவதும் பொலிஸார் தங்கள் சோதனையை தீவிரப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## மின்னணுப் பகுதியில் கட்டாய வேலை

### மலேசியாவில் நடைமுறையில்

மலேசியாவின் மின்னணுத் தொழில்துறையில் வேலை பார்க்கும் தொழிலாளர்களில் மூன்றில் ஒரு பங்கினர் கட்டாயமாக வேலை வாங்கப்படும் நிலையில் இருக்கலாம் என்று அமெரிக்க ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று கருதுகிறது.

வெரிட்டி என்ற இந்த நிறுவனம் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களிடையே நடத்திய ஆய்விற்குப் பின்னர், நாணயமற்ற முகவர்கள் ஆளெடுக்கும்போது மிக அதிகமான மற்றும் வெளிப்படையற்ற வகையில் பணம் வாங்குவதால், இந்தப் பணத்தைத் திரும்பத் தருவதற்கு தொழிலாளர்களால் சிரமமாக இருப்பதாகக் கண்டறிந்திருக்கிறது.

பல வெளிநாட்டுத் தொழிலாளர்கள் தங்கள் கடவுச்சீட்டுகளை (பாஸ்போர்ட்) தர நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்றும் கூறப்படுகிறது ஆப்பிள், சாம்சங், சோனி போன்ற பல சர்வதேச நிறுவனங்களுக்கு மின்னணுப் பொருட்களின் உதிரிப் பாகங்களைத் தயாரிக்க மலேசியா பல இலட்சக் கணக்கானோரை வேலைக்கு அமர்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## சுதந்திரக் கனவை மாற்றவே முடியாது

### உக்ரைன் போராளி



(மொஸ்கோ)

ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகள் வசம் இருக்கும் மக்கள் குடியரசுகளுக்கு சுயாட்சி வழங்குவதற்கான புதிய சட்டம் சுதந்திரத்துக்கான தமது வேட்கையை மாற்றாது என்று கிழக்கு உக்ரைனில் இருக்கும் கிளர்ச்சிக்குழு தலைவர் தெரிவித்துள்ளார்.

ஆனாலும், அந்தச் சட்டத்தில் பல சாதகமான அம்சங்கள் இருப்பதாகவும், சமரசப் பேச்சுவார்த்தைகளுக்கான ஒரு அடிப்படையாக அதனைக் கொள்ள முடியும் என்றும் டொனெட்ஸ்க் மக்கள் குடியரசை சேர்ந்த அண்ட்ரே புர்கின் கூறியுள்ளார்.

உக்ரைனிய நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட அந்தச் சட்டத்தில் கிளர்ச்சிக்காரர்கள் சிலருக்கு பொதுமன்னிப்பு வழங்கும் அம்சங்களும் இருக்கின்றன.

ஆனால், பெரிய குற்றங்களைச் செய்தவர்கள் அதில் அடங்கமாட்டார்கள்.

அந்தப் பிராந்தியத்தில் கடந்த 5 மாதங்களாக நடக்கும் மோதல்களுக்கு முடிவு காணும் வகையில் ஒரு மோதல் நிறுத்தத்தை கொண்டு வரும் நோக்கமாகவே இந்த நகர்வுகள் வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)




## ஸ்கொட்லாந்து பிரிய வேண்டுமா?

### வாக்கெடுப்பு ஆரம்பம்

ஸ்கொட்லாந்து சுதந்திரத்துக்கான கருத்தறியும் வாக்கெடுப்பு நேற்று வியாழக்கிழமை முதல் ஆரம்பமானது. நீண்ட வரிசைகளில் மக்கள் வாக்குச்சாவடிகளில் வாக்களித்து வருகிறார்கள்.

கடந்த சுமார் 300 ஆண்டுகளாக ஐக்கிய இர்ாச்சியத்தின் ஒரு பகுதியாக இருக்கும் ஸ்கொட்லாந்து பிரிந்து போகவேண்டுமா என்பது குறித்த கருத்தறியும் வாக்கெடுப்பு குறித்த அரசியல் விவாதம் கடந்த இரு ஆண்டுகளாக ஸ்கொட்லாந்தில் தீவிரமாக நடந்தது.

இந்த விவாதம் ஸ்கொட்லாந்து மக்களை இரு வேறு தரப்புகளாக பிரித்து, குடும்பங்களிலும், நண்பர்களிடையேயும் அரசியல் ரீதியான கருத்து வேறுபாடுகளைத்தூண்டியது.

தேர்தலில் வாக்களிக்க ஸ்கொட்லாந்தின் வாக்காளர்களில் 97 சதவீதத்தினர் பதிவு செய்திருக்கும் நிலையில், ஸ்கொட்லாந்தின் தேர்தல் வரலாற்றிலேயே மிகவும் பரபரப்பான கட்டமாக இக் கால கட்டம் இருக்குமென கூறப்படுகிறது.

பிரிட்டிஷ் அரசியல் வரலாற்றிலேயெ முதல் முறையாக, 16 இலிருந்து 17 வயதானவர்களும் இந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## பரவி வரும் எபோலா வைரஸால் உலக பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்


### ஒபாமா கவலை

(வோசிங்டன்)

மேற்கு ஆபிரிக்காவில் பரவி வரும் எபோலா வைரஸ் நோயானது உலக பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

மேற்படி, நோய் தொற்று தொடர்பில் அமெரிக்கா என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை உலகம் பார்த்துக்கொண்டிருக்கிறது எனத் தெரிவித்த ஒபாமா, அந்த நோய்க்கு எதிரான உலகளாவிய செயற்பாடு தேவையாகவுள்ளதாக் கூறினார்.

இதன்போது, அவர் எபோலா நோயை கட்டுப்படுத்த அந்த வைரஸ தொற்றுக்கு உள்ளான பிரதேசத்துக்கு 3 ஆயிரம் அமெரிக்கப் படையினரை அனுப்புவதற்கான உத்தரவு மற்றும் புதிய சுகாதார கவனிப்பு வசதிகளை ஸ்தாபித்தல் உள்ளடங்கலான நடவடிக்கைகளை



முன்னெடுப்பது குறித்து அறிவித்துள்ளார்.

மேற்படி, வைரஸால் இந்த வருடம் 2 ஆயிரத்து461பேர் உயிரிழந்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம தெரிவிக்கிறது. இது அந்நோயால் பாதிக்கப்பட்டவர்களில் அரைப் பங்காகும்.

எபோலா வைரஸானது நவீன காலத்தின் ஒப்பிட முடியாத சுகாதார பிரச்சினையொன்றாகவுள்ளதாக ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அந்த வைரஸ் நோய் பரவுவதை தடுப்பதற்கான போராட்டத்துக்காக தேவைப்படும் நிதியின் அளவு கடந்த மாதத்தில் 10 மடங்காக அதிகரித்துள்ளது.


ஒவ்வொன்றும் 100 படுக்கை அறைகளைக் கொண்ட 17 சுகாதார கவனிப்பு நிலையங்களை ஸ்தாபித்தல், ஒரு வாரத்துக்கு 500 சுகாதார பராமரிப்பு பணியாளர்களுக்கு பயிற்சி, பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு விநியோகங்களை மேற்கொள்ளல், பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வீட்டிலேயே சுகாதார கவனிப்பு என்பன ஒபாமாவால் அறிவிக்கப்பட்ட எபோலா நோய்க்கு எதிரான சுகாதார கவனிப்புத் திட்டத்தில் உள்ளடங்குகின்றன. (இ)

## பெப்சி போத்தலில் எபோலா வைரஸ் அமெரிக்காவை அச்சுறுத்தும் ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள்

(வோசிங்டன்)

அமெரிக்காவில் எபோலா வைரஸை பரப்புவதற்கு ஐ.எஸ் ஐ.எஸ் போராளிகள் திட்டமிட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டுள்ளன.

ஐ.எஸ்ஐ.எஸ் போராளி ஒருவர் புதிய திட்டங்கள் குறித்து எழுதியுள்ள தகவல்கள் வெளியாகியுள்ளன.




இந்த திட்டத்தின் படி ஐ.எஸ். ஐ.எஸ் போராளிகள் பெப்சி குளிர் பான போத்தலில் எபோலா வைரஸை கலந்து அதை அமெரிக்காவிற்கு எடுத்துச் சென்று அங்குள்ள நீர் நிலைகளில் கலந்து விட திட்டமிட்டுள்ளது.

மேலும் ஐஎஸ்ஐஎஸ் போராளிகளை ஆபிரிக்காவுக்கு அனுப்பி அவர்களை எபோலா வைரஸ் தாக்கியதும், அவர்களை அமெரிக்காவுக்கு அனுப்பி அங்கு எபோலா வைரஸை பரப்பவும் திட்டமிட்டிருந்ததாக தெரியவந்துள்ளது. (இ)

## விளையாட்டுக்கும் கல்விக்கும் கூட சிரியாவிலுள்ள சிறுவர்களுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ்.தடையிட்டுள்ளது

(டமாஸ்கஸ்)

சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் உள்ள சிறுவர்களுக்கு இனி கணிதம், விளையாட்டு மற்றும் சமூககல்வி ஆகியவைகளை நடத்தக்கூடாது என ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

விளையாட்டையும் தடை செய்துள்ள தீவிரவாதிகள், தேர்தல் மற்றும் ஜனநாயகம் பற்றி தெரிந்து கொள்ள சிறுவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று தெரிவித்துள்ளனர். மாறாக தீவிர இஸ்லாமிய குழுக்கள் குறித்து சிறுவர்கள் கற்பிக்கப்படுவார்கள் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். இந்த உத்தரவை மீறும் ஆசிரியர்கள் தண்டிக்கப்படுவார்கள் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இனி பாடப்புத்தகங்களில் உள்ள சிரிய அரபு குடியரசு நாடு என்ற எழுத்துக்களுக்கு பதிலாக இஸ்லாமிய நாடு என்ற எழுத்து இடம் பெறவேண்டும் என்றும் தீவிரவாதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

ஆசிரியர்கள் தேசியம் குறித்தும் இனம் தொடர்பான பாடங்களையும் நடத்துவதற்கு பதிலாக இஸ்லாம் பற்றி மட்டும் போதிக்க வேண்டும் என்றும் தீவிரவாதிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலின மாற்று அறுவை சிகிச்சைக்கு நிதியுதவி வழங்க அரசாங்கம் முடிபு

(சென்னை)

இந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலத்தில் பாலின மாற்று அறுவை சிகிச்சை செய்ய விரும்புபவர்களுக்கு அம்மாநில அரசு நிதி உதவி வழங்க முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் பாலினத்தவருக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்ய சத்தீஸ்கர் மாநில அரசு, முயன்று வருவதாகவும், ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ மாற நினைப்பவர்களின் பாலின மாற்று அறுவை சிகிச்சைகளுக்கு தேவையான நிதியுதவியை அளிக்க மாநில அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் விரைவில் ஒரு அதிகாரபூர்வ அறிக்கையை அம்மாநிலத்தின் சமூக நலத்துறை அமைச்சர் ராம்ஷீலா சாகு வெளியிடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் பாலினத்தவர்களை தனி பாலினமாக அங்கீகரித்து, அவர்களுக்கு கல்வித் துறையிலும் வேலை வாய்ப்பு அளிப்பதிலும் சம உரிமைகள் வழங்க வேண்டும் என்று இந்திய உச்சநீதிமன்றம் இந்த ஆண்டின் முற்பகுதியில் தீர்ப்பளித்திருந்தது.

பாலின மாற்று அறுவை சிகிச்சை சற்று சிக்கலான ஒன்று என்றும், இந்த சிகிச்சைக்கு ஐம்பதாயிரம்ரூபாவிலிருந்து, நான்கு இலட்சம் ரூபாய் வரை செலவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறுவை சிகிச்சை தவறாக செய்யப்படுமேயானால் அது சிகிச்சை பெறுபவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தில் அரசு வைத்தியசாலைகளில் பாலின மாற்று அறுவை சிகிச்சைகள் இலவசமாக செய்யும் திட்டத்தை தமிழக அரசு முன்பு அறிமுகப்படுத்தி, அந்தத் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனாலும், தமிழக அரசு வைத்தியசாலைகளில் ஆண பாலினத்திலிருந்து பெண் பாலினத்திற்கு மாற விரும்பும் திருநங்கைகளுக்கான அறுவை சிகிச்சை மட்டும்தான் செய்யப்படுவதாகவும், பெண்ணாக இருந்து ஆணாக மாறவிரும்பும் திருநம்பிகளுக்கு அறுவை சிகிச்சைகள் செய்யப்படுவதில்லை என்றும் மூன்றாம் பாலின செயற்பாட்டாளரும் எழுத்தாளருமான லிவிங் ஸ்மைல் வித்யா தெரிவிக்கிறார்.

அத்துடன் அரசு வைத்திய சாலைகளில் சிறந்த தரத்தில் அறுவை சிகிச்சை செய்யப்படுவதில்லை என்றும், தமிழகத்தில் பெரும்பாலான திருநங்கைகள் தனியார் வைத்தியசாலையிலேயே இத்தகைய அறுவை சிகிச்சைகளை செய்து கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# சொத்து தகராறில் தம்பியை குத்திக் கொன்ற அண்ணன்

(பெரும்புதூரை)

ஸ்ரீபெரும்புதூரை அடுத்த படப்பை ஆதனஞ்சேரியை சேர்ந்தவர் மூங்கிலான். இவரது மகன்கள் செந்தில், ராஜ்குமார். இருவரும் திருமணமாகி அதே பகுதியில் தனித்தனியாக குடும்பத்துடன் வசித்து வந்தனர்.

இந்த நிலையில் ராஜ்குமாருக்கு நிலம் ஒன்றினை மூங்கிலான் வாங்கி கொடுத்தார். இதனால் செந்தில் தனக்கும் நிலம் வேண்டும் என்று தகராறில் ஈடுபட்டு வந்தார்.

நேற்று முன்தினம் இரவு செந்தில், அவரது மனைவி மோகனா ஆகியோர் மூங்கிலானின் வீட்டிற்கு சென்று வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதுபற்றி தெரிந்ததும் ராஜ்குமாரும் அங்கு வந்தார். அப்போது அவர்களுக்கிடையே கைகலப்பு ஏற்பட்டது. கோபம் அடைந்த ராஜ்குமார் கத்தியால் மோகனாவை குத்தினார்.

இரத்த வெள்ளத்தில் மனைவி சரிந்ததை பார்த்ததும் கோபமடைந்த செந்தில் தான் வைத்திருந்த கத்தியால் ராஜ்குமாரை சரமாரியாக குத்தினார். இதில் அவர் சம்பவ இடத்திலேயே மயங்கி விழுந்தார்.

இதனை பார்த்து அதிர்ச்சி அடைந்த உறவினர்கள் அவரை மீட்டு குரோம்பேட்டை அரசு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு பரிசோதித்த வைத்தியர்கள் ராஜ்குமார் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். பலத்த காயம் அடைந்த மோகனாவுக்கு சென்னை அரசு வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

சொத்து தகராறில் பெற்றோர் முன்பே தம்பியை அண்ணன் குத்தி கொன்ற சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ)




# இந்தியை கட்டாயமாக்கும் முயற்சி; தமிழக முதலமைச்சர் கடும் எதிர்ப்பு

தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் இந்தியை முதன்மைப் பாடமாக அறிமுகப் படுத்தவும் சில படிப்புகளில் இந்தியைக் கட்டாயமாக்கவும் பல்கலைக்கழக மானியக் குழு கேட்டுக் கொண்டிருப்பது சட்டத்திற்குப் புறம்பானது என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில், பட்டப் படிப்பில் ஆங்கிலத்துடன் இந்தி மொழியும் ஒரு முதன்மைப் பாடமாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும். சட்டம் மற்றும் வணிகவியல் பட்டப் படிப்பு பயில்வோருக்கு கட்டாயமாக இந்தி கற்பிக்கப்பட வேண்டும் என்பதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விபரங்களைக் கோரி அனுப்பப்பட்ட சுற்றறிக்கை, அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு மட்டும் 16.9.2014 அன்று கிடைக்கப்பெற்றுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

2011ஆம் ஆண்டில் பிரதமர் தலைமையில் நடைபெற்ற கேந்திரிய இந்தி சமிதியின் 30ஆவது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் படியே இந்த சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருப்பதாக கூறியுள்ள முதலமைச்சர், 1963ஆம் ஆண்டின் அலுவல் மொழிகள் சட்டத்தில், இந்தி மொழி பேசாத மாநிலங்களின் மீது இந்தி மொழியை திணிக்கக் கூடாது என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே, தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு, பல்கலைக்கழக மானியக் குழுவின் இந்தச் சுற்றறிக்கை பொருந்தாது என்றும் சட்டம் மற்றும் வணிகவியல் பட்டப் படிப்புகளில் கட்டாயம் இந்தியும் கற்பிக்கப்பட வேண்டும் என்று தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களை பல்கலைக்கழக மானியக் குழு கேட்டுக்கொள்வது ஏற்றுக்கொள்ள இயலாதது என்பதோடு சட்டத்திற்கும் புறம்பானது என ஜெயலலிதா கூறியுள்ளார்.

கேந்திரிய இந்தி சமிதி கூட்ட முடிவுகள் தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களை கட்டுப்படுத்தாது என்பதை பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு தெரிவிக்க தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் முதலமைச்சர் ஜெயலலிதா மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# பிரதமர் நரேந்திரமோடி பங்கேற்கும் அமெ. கூட்ட இருக்கைகள் நிரம்பின!

பிரதமர் நரேந்திர மோடி அடுத்த வாரம் அமெரிக்காவுக்கு சுற்றுப் பயணம் செல்லவுள்ளார். அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை அவர் வெள்ளை மாளிகையில் 28, 29 ஆம் திகதிகளில் 2 நாட்கள் சந்தித்து பேசவுள்ளார்.

பிரதமர் மோடியின் அமெரிக்க பயணத்தை அங்கு வாழும் இந்தியர்கள் மிகவும் ஆவலுடன் எதிர்நோக்கி காத்திருக்கிறார்கள். மோடி பேசும் பிரமாண்ட கூட்டத்துக்கும் அவர்கள் ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள்.

28ஆம்திகதி நடைபெறவுள்ள அந்த கூட்டம் நியூயோர்க் நகரில் மடிசன் சதுக்கத் தோட்டத்தில் நடைபெறவுள்ளது. இந்த சதுக்கத்தில் ஒரே நேரத்தில் சுமார் 20 ஆயிரம் பேர் அமர முடியும்.

பாதுகாப்பை கருத்தில் கொண்டு இந்த கூட்டத்தில் கலந்து கொள்ள வரும் அனைவரும் முன்பதிவு செய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. இதையடுத்து பல்வேறு நிகழ்ச்சி அமைப்பாளர்கள் மூலம் பங்கேற்பாளர்கள் பெயர்கள் பதிவு செய்யப்பட்டன.


மொத்தமுள்ள 20 ஆயிரம் இருக்கைகளில் நேற்று முன்தினத்துடன் 18 ஆயிரம் இருக்கைகள் நிரம்பின. இதையடுத்து பெயர் பதிவு நிறுத்தப்பட்டது. மீதமுள்ள 2 ஆயிரம் இடங்கள் கூட்ட அன்பளிப்பாளர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே பிரதமர் மோடி பேச்சை கேட்க அங்கு வாழும் மேலும் சுமார் 30 ஆயிரம் இந்தியர்கள் விருப்பம் தெரிவித்தனர். ஆனால் அவர்கள் மோடி பேச்சை கேட்க டைம்ஸ் சதுக்கத்தில் மிகப் பிரமாண்டமான திரை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர நியூயோர்க், வோஷிங்டன் உட்பட பல முக்கிய நகரங்களில் உள்ள ஹோட்டல்களில் திரை அமைத்து பிரதமர் மோடி பேச்சை நேரடியாக காட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறன.(இ)

# குரங்கினது மரணத்துக்காக மொட்டையடித்த கிராமமக்கள்





இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தின் ஒரு கிராமத்தில் குரங்கு ஒன்று மரணமடைந்ததை அனுஷ்டிக்க அக்கிராமத்து மக்கள் 200 பேர் மொட்டையடித்துள்ளனர்.

நாய்கள் துரத்தியதை அடுத்து குளம் ஒன்றில் விழுந்து அந்தக் குரங்கு மூழ்கியுள்ளது.

அந்தக் குரங்கின் மரணம் அக்கிராமத்திற்கு துரதிர்ஷ்டத்தை கொண்டு வரும் என்று அஞ்சிய கிராமத்து மக்கள் குரங்குக்கு இறுதி ஊர்வலம் ஒன்றை ஏற்பாடு செய்து, இந்துமத சடங்குகளின் படி அந்த விலங்கின் உடலை தகனம் செய்தனர்.

இந்தியாவில் குரங்குகள் இந்துக்களால் புனிதமாகக் கருதப்படுகின்றன. அனுமனுக்கு இந்தியா முழுவதும் பல கோயில்கள் இருக்கின்றன.மத்திய பிரதேசம் மாநிலத்தின் தாகாச்யா கிராமத்தில் இருந்து வரும் ஒரு சிறிய அனுமன் கோவில் அருகே வாழ்ந்து வந்த இரண்டு குரங்குளில் ஒன்று தான் இறந்து போனது என்று அக்கிராமத்தில் வசிக்கும் மிதுன் படேல் தெரிவித்துள்ளார்.

செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி மூழ்கிய அந்த குரங்கின் உடல் அடுத்த நாள் கிராம மக்களால் கண்டெடுக்கப்பட்டது.

கிராமத்தின் உள்ளே குரங்கு இறந்து போன சம்பவம் மிகவும் துரதிஷ்டமானது என்று கிராமப் பெரியவர்கள் கூறுகின்றனர். அது எங்களுக்கு துரதிர்ஷ்டத்தையோ ஒரு இயற்கை பேரழிவையோ கொண்டு வந்துவிடுமோ என்று பயமாக இருந்தது என்று அக்கிராமத்தில் வாழும் மிதுன் படேல் தெரிவித்துள்ளார். கிராமத்திற்கு எதுவும் விரும்பத்தகாதது நடந்து விடக்கூடாது என்பதை உறுதி செய்ய குரங்கின் ஆன்மாவை திருப்தி செய்ய கிராமத்தினர் முடிவு செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

குரங்கின் உடல் தகனம் செய்யப்பட்ட பிறகு, துக்கத்தை அனுஷ்டிக்கும் விதமாக உள்ளூர் ஆண்கள் தலைகளை மொட்டையடித்து தாடிகளையும் மழித்தனர்.

புனித கங்கையில் இந்தக் குரங்கின் சாம்பலை கரைக்க இந்து மத புனித நகரமான ஹரித்வாருக்கு சில கிராம மக்கள் பயணித்துள்ளனர். (இ)

# சகாயம் குழுவுக்கு எதிரான தமிழகத்தின் மனுதள்ளுபடி

(சென்னை)

தமிழ்நாட்டில் நடந்ததாக கூறப்படும் மிகப்பெரிய கிரானைட் மற்றும் கனிம மணல் முறைகேடுகள் குறித்து விசாரிப்பதற்காக ஐ ஏ எஸ் அதிகாரி சகாயம் தலைமையில் சென்னை உயர்நீதிமன்றம் அமைத்த விசாரணைக்குழுவுக்கு தடை விதிக்கும்படி தமிழக அரசு செய்த மேல் முறையீட்டு மனுவை இந்திய உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்திருக்கிறது.

சென்னை உயர்நீதிமன்றம் அமைத்துள்ள சகாயம் தலைமையிலான விசாரணைக் குழுவுக்கு தடை விதிக்கவும், இந்த விவகாரத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்ட சிறப்பு குழுவே விசாரணைகளை மேற்கொள்ள அனுமதி வழங்க கோரியும் தமிழக அரசு தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆயிரம் முட்டையிடும் ஆமை அமைதியாக இருக்கும். ஒரு முட்டையிடும் கோழி கொக்கரித்துக் காட்டும் – தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சரத் பொன்சேகாவின் சாம்பல் குளியல்

கோழி முட்டை இடுவதற்கும் சேவலுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. கோழி முட்டை கருக்கட்டி குஞ்சு பொரிப்பதென்றால் மட்டுமே சேவலின் தொடர்பு தேவைப்படுகின்றது.

கோழி முட்டை இடுவதற்கு சேவல் தேவையில்லை என்ற தத்துவத்தை விளக்குவதற்காக சாம்பல் குளியல் பற்றிய தத்துவத்தை கிராமத்து மக்கள் கூறிக் கொள்வர்.

சாம்பல் குளித்தும் கோழி முட்டை இடும் என்பதே அந்தத் தத்துவம். அட! கோழி முட்டை இடுவதற்கும் சாம்பல் குளியலுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. இருந்தும், சாம்பல் குளியலில் கோழிகள் காட்டும் ஆர்வம் காரணமாக அப்படியொரு புனைப்பை நம் கிராமத்து மக்கள் கொடுத்தனர்.

சாம்பல் குளியல் மூலம் ஏதோவொரு வகையில் கோழி ஆறுதல் அடைகிறது. அதைக் குழப்பாமல் இருக்க வேண்டுமல்லவா?.

இதற்காகவே சாம்பல் குளித்து கோழி முட்டை இடும் என்று கூறப்பட்டது. இவ்வாறு கூறுவதனூடாக சாம்பல் குளியலுக்கு கோழி வளர்ப்பவர்கள் இடைஞ்சல் செய்யமாட்டார்கள்.

ஜீவகாருணியம் கருதி நம் முன்னோர்கள் இப்படியொரு முறைமையை வகுத்து, கொத்தித் திரியும் அந்தக் கோழிக்கும் உதவி புரிந்தனர்.

இந்தக் கதையை இங்கு கூறுவதற்கு ஒரு காரணம் உண்டு. நம் நாட்டின் முன்னாள் இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவின் நிலைமையை ஒரு கணம் சிந்தித்துப்பாருங்கள்.

வன்னி யுத்தத்தில் வெற்றி பெற்று விட்டோம் என்ற செய்தியை சலூட் அடித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தெரியப்படுத்தியவர் அவர். பின்னர் சிறையில் குப்பேந்தி உணவு பெற்று அதையுண்டு உயிர் வாழ்ந்தவர்.

அமெரிக்காவின் கருணையால் விடுதலை பெற்று இப்போது ஜனநாயகக் கட்சியின் தலைவர் என்ற வகையில் அரசியல் களத்தில் ஓர் இடம் பிடித்து வைத்துள்ளார்.

தமிழ் மக்கள் மீது கடும் வெறுப்புக் கொண்ட சரத் பொன்சேகா, இந்த நாடு பௌத்த சிங்களவர்களுக்குச் சொந்தமானது. விரும்பினால் தமிழர்கள் இங்கு வாழலாம் என்று கூறியிருந்தார்.

இப்போது அவர் இராணுவத்திற்கு ஒரு விடயத்தைக் கூறியுள்ளார்.

இராணுவத்தின் கடமை நாட்டைக் காப்பதேயன்றி அரசைக் காப்பதல்ல என்பதே அவர் கூறிய கருத்து. முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறிய இக்கருத்து நியாயமானது. ஆனால் அதை அவர் இராணுவத் தளபதியாக இருந்தபோது கூறியிருந்தால், அது பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் உயிர்களைக் காப்பாற்றியிருக்கும்.

இராணுவத்தின் கடமை நாட்டைக் காப்பதென்றால் அதன் பொருள் மக்களைக் காப்பதாகும். மக்களைக் காக்கின்ற இராணுவத்திடம் சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற பேதமை இருக்க முடியாது – இருக்கவும் கூடாது.

ஆம், இராணுவத் தளபதியாக இருந்து வன்னியில் யுத்தம் நடத்தி, தமிழரென்றால் கொல் என்று சுட்டுவிரல் காட்டிய சரத் பொன்சேகா இப்போது அதிகாரம், பதவி , பட்டம் என எல்லாவற்றையும் பறிகொடுத்து விட்டு வெறுவிலியாக நின்று,

இராணுவம் நாட்டைக் காக்கவேண்டுமேயன்றி அரசைக் காப்பது இராணுவத்தின் கடமையல்ல என புத்திமதி கூறுகிறார்.

முட்டையிடும் கோழிகள் சாம்பல் குளிப்பது ஒரு புறம். எக்காலத்திலும் முட்டையிட முடியாத கோழிகளும் சாம்பல் குளிக்கின்றன அல்லவா? அந்தச் சாம்பல் குளியலைத்தான் இப்போது சரத் பொன்சேகா செய்கிறார். அவ்வளவு தான்.

# நம் வீட்டுக் கதவைத் தட்டும் முன்னோர்கள்

முக்கிய விசேட நாட்களில் கோவில்களுக்கு செல்வது பெரும்பாலான மக்களின் வழக்கம். கோவிலில் இருக்கும் தெய்வங்களை விட மேலான தெய்வங்களாக உள்ளவர்கள் நம் மூதாதையர்கள். ஆனால் சிலர் தமது மூதாதையர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஒரு குடும்பம் சுபீட்சமாக இருக்க வேண்டுமென்றால் பிதிர்களின் ஆசீர்வாதம் இருக்கவேண்டும். பிறந்த நாள், திருமண நாள், முக்கிய விசேட நாட்களில் நாம் நம்மை விட மூத்தவர்களிடம் சென்று ஆசிபெறுகிறோம். உயிருடன் இருப்பவர்களை நாம் நேரில் சென்று சந்தித்து ஆசி பெறுகின்றோம். இறந்தவர்களிடம் எப்படி ஆசி பெறுவது?

பொதுவாக இறந்தவர்களின் ஆன்மா உடனடியாக இங்கிருந்து சென்று விடுவதில்லை. 10 நாட்கள் வரை தனது வீட்டு வாசலில் நின்று தனது மரணத்திற்காக யார் வருத்தப்பட்டு வீட்டுக்கு வந்து துக்கம் விசாரிக்கிறார்கள் என்பதை பார்க்கிறது. 11,12 ஆம் நாட்களில் வீட்டிற்குள் சென்று தனக்கு வேண்டப்பட்டோர் கொடுக்கும் படையலை ஏற்றுக்கொள்கிறது. 13ஆம் நாளில் வானுல பயணத்தை தொடங்குகிறது. வானுலகம் சென்றடைய ஒருவருடம் ஆகும். அதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் இறந்த நாளில் வாரிசுகள் திதி கொடுக்கவேண்டும். அது இறந்தவர்களை சென்றடைவதாக ஐதீகம். ஒவ்வொரு ஆண்டும் இறந்தவர்கள் நம்மைச் சந்தித்து ஆசி வழங்க வரும் காலம் தான் மகாளயபட்சம். புரட்டாதி மாத அமாவாசை மகாளய அமாவாசை எனப்படுகிறது. அதற்கு முன்பு வரும் 14 நாட்கள்தான் இந்த மகாளய பட்சம் ஆகும். புரட்டாதி மாதம் பௌர்ணமியை அடுத்து வரம் பிரதமை திதியில் தொடங்கி அமாவாசையுடன் மகாளய பட்சம் நிறைவு பெறுகிறது.

இறந்த ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திதி உண்டு. மகாளய பட்சத்தில் வரும் அந்தத் திதியில் இறந்து போன மூதாதையருக்கு தர்ப்பணம் செய்து அவர்களின் ஆசியைப் பெறவேண்டும். ஒருவேளை மூத்தோர் இறந்த திதி தெரியாதோர் மத்தியாஷ்டமி எனப்படும் அஷ்டமி திதியன்று செய்யலாம். அவ்வாறு செய்தால் நம் குடும்பத்தைச் சுற்றிவரும் தீவினைகள் மறைந்து விடும் என்கிறது இந்துமதம். ஒவ்வொரு ஆண்டும் தந்தை இறந்த திதியன்று திதி கொடுப்பவர்கள் மகாளய பட்சத்தின் போதும் அதேமுறையில் திதி கொடுக்கலாம். இறந்த திதியன்று திதி கொடுக்கும் வழக்கம் இல்லாதவர்கள் மகாளய பட்சத்தின் ஏதோவொரு நாளில் நீர்நிலைகளுக்குச் சென்று திதி கொடுப்பது நல்லது. குளித்து, நனைத்து காயவைக்கப்பட்ட சுத்தமான ஆடைகளை அணிந்து தான் திதிகொடுக்கவேண்டும்.

இந்த வருட மகாளய பட்சம் வரும் செவ்வாய்க்கிழமையுடன் முடிவடைகிறது. இதுவரை திதி கொடுக்காதவர்கள் வரும் செவ்வாய்க்கிழமை 23.09.2014 இற்கு முன்னர் இறந்த மூதாதையர்களுக்கு குருமார்கள் மூலமாக தர்ப்பணம் செய்து திதி கொடுத்து மூதாதையர்களின் ஆசியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

சிவஸ்ரீ வி.பிரணவன்ஐயர்
யாழ்.வண்.வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்திவிநாயகர்தேவஸ்தானம்.

# வங்கியில் பணமோசடியில் ஈடுபட்ட வவுனியா இளைஞன் கைதாகினார்

(குருமன்காடு)

வயது முதிர்ந்த குடும்பம் ஒன்றை ஏமாற்றி அவர்களின் வங்கிக் கணக்கில் இருந்து மோசடியான முறையில் பணம் பெற்ற சந்தேகத்தில் ஒருவரை தாம் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

வவுனியா திருநாவற்குளம் பகுதியில் கணவன் மனைவி இருவர் வயது முதிர்ந்த நிலையில் வசித்து வந்துள்ளனர். இவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் உள்ளனர்.

இந்த நிலையில் இவர்கள் இருவரையும் முச்சக்கரவண்டியில் ஏற்றிச் செல்லும் ஒருவர் அவர்களுடன் நெருக்கமாகப் பழகியுள்ளார்.

வங்கி நட வடிக்கைக்காக முதியவர்களுடன் வங்கிக்குச் சென்ற குறித்த வாகனச் சாரதி வங்கிப் பணவிபர நிலுவைகளை அறிந்து வேறு நபருடன் இணைந்து குறித்த முதியவர்களின் கணக்குக்கான வங்கி அட்டையைப் பெற்று அதிலிருந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை மோசடியான முறையில் பெற்றுள்ளார்.

இதேவேளை இவர்களது வங்கிக் கணக்குப் புத்தகமும் காணாமற் போயுள்ளது.

இந்நிலையில் வயது முதிர்ந்த தந்தை கடந்த ஜூலை மாதம் இறந்து விட்டார். இதன் பின்னர் அவரது மனைவி வங்கிக்குச் சென்று தனது புத்தகம் தொலைந்து விட்டதாகவும் அதனைப் புதிதாகத் தருமாறும் கோரியுள்ளார்.

அதனடிப்படையில் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி வங்கியால் புதிய புத்தகம் வழங்கப்பட்டபோதே மேற்குறித்த தொகை வங்கி அட்டைமூலம் பெறப்பட்டது தெரிய வந்தது.

இதனையடுத்த தான் வங்கி அட்டையை எதற்கும் விண்ணப்பிக்கவும் இல்லையெனவும் அதிலிருந்து பணம் பெறவும் இல்லையெனவும் தனது பணத்தை வங்கியிலிருந்து யாரோ எடுத்துவிட்டார்கள் என்றும் வவுனியா பொலிஸில் அவர் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா பொலிஸார் இச்சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒரு இளைஞரை கைது செய்தனர் என்றும் முச்சக்கரவண்டி சாரதியை தேடி வருகின்றனர் என்றும் தெரிவித்துள்ளனர். (2-250)

# துரதிர்ஷ்டவசமான அதிர்ஷ்டலாபச் சீட்டு

அதிர்ஷ்ட இலாபச்சீட்டை போலியான முறையில் அச்சடித்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெப்பிலியானவில் வைத்தே அவர், கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவரிடமிருந்த கணனி மற்றும் அச்சடிக்கும் இயந்திரம் ஆகியவற்றை கைப்பற்றியுள்ளதாகவும் கம்பஹா விசேட விசாரணைப் பிரிவு அறிவித்துள்ளது.

அதிர்ஷ்ட இலாபச்சீட்டிழுப்பு பெறுபேறுகள் தொலைக்காட்சியில் வெளியானதன் பினனர், 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான இலக்கங்களை அவர், போலியான முறையில் அச்சடித்து இலாபச்சீட்டு விற்பனை பிரதிநிதியிடம் கொடுத்து பணம் பெற்றுக் கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது. (இ)

### அமைதியின் சொற்கள்

நீங்கள் எதனை தேடுகிறீர்களோ அது உங்களின் உள்ளே தான் உள்ளது என்று கூறாத ஞானிகளும் இல்லை. மகான்களும் இல்லை. மனிதனின் உண்மையான நலத்திற்காக காலம் காலமாக அவதாரம் எடுத்த மகான்கள் எல்லோரும் இதனைத்தான் கூறினார்கள். நீங்கள் தேடுவது உங்களின் உள்ளேதான் உள்ளது எனக் கூறினார்கள். *பிரேம் ராவத்*

# கடற்படையினர் நால்வர் காயம்

(கொழும்பு)

வாகரை, கஜுவத்தையிலுள்ள கடற்படையினரின் வாகனம் ஒன்று மட்டக்களப்புக்கு சென்று கொண்டிருந்த போது, ஓட்டமாவடி பாலத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாய மடைந்த 4 கடற்படை வீரர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ள இந்த விபத்தில் படுகாயமடைந்த கடற்படை வீரர்கள் 4 பேரும் உடனடியாக வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்த நிலையில், இவர்களில் இருவரின் நிலைமை மோசமாக இருப்பதனால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வாழைச்சேனை வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடற்படை வாகனத்தில் ஏற்பட்ட இயந்திரக்கோளாறே இந்த விபத்துக்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்து தொடர்பில் வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (இ)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### அதிகமாகத் தூங்காதே

★ பிறரை நன்மை செய்யத் தூண்டுங்கள். அதிலும் உங்களுக்கு நன்மை உண்டு. பிறர் செய்யும் தீமையை விட்டு தடை செய்யுங்கள். அதிலும் உங்களுக்கு நன்மை உண்டு.

★. தந்தையின் உடன்பிறப்பு சிறிய தந்தை, தாயின் உடன்பிறப்பு சிறிய தாய் இருவரும் தாய், தந்தைக்கு நிகரானவராகும்.

★ குறையாக இருந்தாலும் தொடர்ந்து செய்யக்கூடிய நற்செயல்களே அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமாக இருக்கும்.

★ நன்மை என்பது நல்லகுணம். தீமை என்பது உள்ளத்தில் மறைந்திருக்கும் கபடம். கபடத்தை பின்பற்றாதீர்கள்.

★ அதிகமான தூக்கம் உள்ளத்தை மரணிக்கச் செய்யும். அதனால், கவலைகள் உண்டாகும்.

★ கண்ணில்லாத குருடர்களுக்கு உதவி செய்பவரின் 100 குற்றங்கள் மன்னிக்கப்படும்.

★ மலர்ந்த முகத்துடன் இருப்பீராக! மலர்ந்த முகத்தவரை அல்லாஹ் நேசிக்கின்றான். கடுகடுத்த முகத்துடையவர்களை வெறுக்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பளுதூக்கும் போட்டியில் பதக்கங்கள் வென்ற மாணவர்கள் கௌரவிப்பு

இலங்கை பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பளுதூக்கும் போட்டியில் பதக்கங்களை வென்ற யாழ். இந்துக்கல்லூரி மாணவர்கள் மற்றும் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வுகள் அந்தந்தப் பாடசாலைகளில் இடம் பெற்றன. ப்ளுதூக்கும் போட்டியில் பதக்கங்களை வென்ற யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர்களுக்கு கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்களினால் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டதுநேற்று முன்தினம் புதன்கிழமை காலை 8 மணியளவில் கல்லூரி மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் கல்லூரி மைதானத்திற்கு அழைத்து வரப்பட்ட வீரர்கள் மாலைகள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள் பளுதூக்கும் போட்டியில் வடமாகாண பாடசா லைகள்பதினெட்டுபதக்கங்களை வென்றுள்ள போதிலும் எட்டுப்பதக் கங்களை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வட மாகாண பிரதி கல்விப்பணிப்பாளர் எஸ். சத்தியபாலன், யாழ்ப்பாணம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.தயாளன் மற்றும் பழைய மாணவர்களும் உரையாற்றினார்கள்


இதேவேளை நடைபெற்ற பெண்களுக்கான பளுதூக்கும் போட்டியில் 19 வயதுப்பிரிவில் தங்கப்பதக்கத்தை வென்ற யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை வீராங்கனை டினோஜாவுக்கு கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்களினால் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டதுநேற்று முன்தினம் காலை 8 மணியளவில் கல்லூரி பாண்ட் வாத்திய இசையுடன் கல்லூரி மைதானத்திற்கு அழைத்து வரப்பட்ட வீராங்கனை மாலைகள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். கல்லூரி அதிபர் திருமதி ரேணுகா சண்முகரெட்ணம் தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. (க-23)



# ஸ்பெயின் செஸ் போட்டி; ஆனந்த் வெற்றி



ஸ்பெயினில் நடைபெற்று வரும் மாஸ்டர்ஸ்செஸ் போட்டியில் இந்திய கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் 2ஆவது வெற்றியை பெற்றார். அவர் ஸ்பெயினை சேர்ந்த வெல்ஜோவை தோற்கடித்தார். இதன் மூலம் அவர் 6 புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளார்.ஆனந்த் 3 ஆவது சுற்றில் ஆர்மேனியாவை சேர்ந்த ஆரோனியனை சந்திக்கிறார். (க)



சிறுவர்களின் ஆளுமையை வெளிப்படுத்தும் முகமாக சீற் நிறுவனத்தினால் கிராமங்களுக்கு இடையேயுள்ள சிறுவர் கழகங்களுக்கு விளையாட்டு நிகழ்வினை நடத்தி வருகின்றது. இதன் ஒரு கட்டமாக வவுனியா ஆசிகுளம் கிராம அலுவலகர் பிரிவிற்கு உட்பட்ட சிறுவர் கழகங்களுக்கிடையே விளையாட்டுப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது..... (க-250)

வலம்புரி SPORTS
விளையாட்டுச் செய்திகள்

# உதைபந்தாட்டப் போட்டி

வடமராட்சி உதைபந்தாட்ட லீக் கின் ஆதரவுடன் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டி ஏதிர்வரும் 20 ஆம் திகதி வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் உடனடியாக தொடர்புகளை ஏற்படுத்துமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

# மின்னொளியிலான தாச்சிப் போட்டி; ஆலடி சிந்து, சாந்தை விநாயகர் வெற்றி

பண்டத்தரிப்பு குஞ்சன் கலட்டி அறிசிவாளி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சிப் போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுவில் ஆலடிசிந்து விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணி 8:4 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழகஅணிமோதிக்கொண்டது.

இதில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழக அணி 10:6 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (க)

# யாழ்ப்பாணம் சென்றலை வீழ்த்தி காலிறுதிக்கு சென்றலைட்ஸ் தகுதி



யாழ்.சென்றல் அணிக்கெதிரான கிரிக்கெட் போட்டியில் அவ் அணியை வீழ்த்தி காலிறுதிப் போட்டிக்கு தெரிவானது சென்றலைட்ஸ் அணி கே.சீ.சீ.சீ. விளையாட்டுக்கழகம் கே.சீ.சீ.சீ. வெற்றிக் கிண்ணத்துக்கான 2014 ஆம் ஆண்டுக்குரிய 30 ஓவர்கள் கொண்ட சுற்றுப் போட்டி ஒன்றினை நடத்துகிறது.

இதில் ஒரு போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் யாழ். சென்றல்-சென்றலைட்ஸ் அணிகள் மோதிக்கொண்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் அணி 6 இலக்குகளை இழந்து 190 ஓட்டங்களை பெற்றுக் கொண்டன. இதில் பாலேந்திரா 67 ஓட்டங்களையும் றொகான் 61 (ஆட்டம் இழக்காது) பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக ஜெரிக் துஷாந், டர்வின் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வதூசனன், மயூரன் தலா ஒரு இலக்கினையும் வீழ்த்தினர். 191 என்ற இலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 4 இலக்குகளை இழந்து பெற்றுக் கொண்டது. இதில் வதூசனன் 61, வினோத்குமார் 47, செல்ரன் (ஆட்டம் இழக்காது) 28 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்து வீச்சில் யாழ்.சென்றல் அணி சார்பாக யசிந்தன், மில்லர், சலிஸ்ரன் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர். இதன்மூலம் சென்றலைட்ஸ் அணி காலிறுதிக்கு தெரிவாகியுள்ளது. காலிறுதிப்போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இப்போட்டியில் திருநெல்வேலி CC அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதவுள்ளது. (க)





ஜப்பான் கராத்தே சம்மேளனம் இலங்கை கிளையினால் [illegible] அல்பேட் பீரிஸ் விளையாட்டு உள்ளக அரங்கில் இரண்டாவது சர்வதேச கராத்தே சுற்றுப்போட்டி நடைபெற்றது. இதில் வவுனியா மாவட்ட சர்வதேச கராத்தே அமைப்பின் கீழ் வட மாகாண தலைமைப் பயிற்றுநருமான சென். சே.க.மோகன்ராஜ் 3rd DAN (IKA) அவரின் மாணவர்கள் கலந்து கொண்டு 4 தங்கப்பதக்கங்கள் உட்பட 2 வெள்ளி, 4 வெண்கல பதக்கங்களை பெற்றுள்ளனர். அவரையும் அம் மாணவர்களையும் படங்களில் காணலாம். (க-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைவான ஓட்டங்களே தோல்விக்கு காரணம்

## டோனி




கொல்கத்தா போன்ற வலுவான அணிக்கு எதிராக நாங்கள் எடுத்த ஓட்டங்கள் குறைவாக இருந்தது தான் தோல்விக்கு காரணம் என அணித்தலைவர் டோனி கூறியுள்ளார்.


சம்பியன்ஸ் லீக் இருபது - 20 தொடரின் முதல் லீக் போட்டியில் சென்னை- கொல்கத்தா அணிகள் மோதின. இதில் சென்னையை 3 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி தனது முதல் வெற்றியை பதிவு செய்தது கொல்கத்தா.

இதுபற்றி சென்னை அணியின் அணித் தலைவர் டோனி கூறுகையில், கொல்கத்தா போன்ற வலுவான அணிகளுக்கு எதிராக நாங்கள் எடுத்த ஓட்டங்கள் போதுமானதாக இல்லை.

அவர்களது சுழற்பந்து சிறப்பாக இருந்தது. எங்கள் அணியில் வேகப்பந்து வீரர்கள் சிறப்பாக விளையாடினர். அந்த அணியின் பின்கள வீரர்கள் ரஸ்ஸல், டென்டஸ்சாட் சிறப்பாக விளையாடி மாற்றத்தை ஏற்படுத்தினர் என்று கூறியுள்ளார்.




# டோக்கியோ ஓபன் டென்னிஸ் அரையிறுதியில் சானியா மிர்சா



ஜப்பானில் நடைபெற்று வரும் டோக்கியோ ஓபன் டென்னிஸ் போட்டியில் நடப்பு சாம்பியனான சானியா மிர்சா-காரா பிளாக் ஜோடி அரையிறுதிக்கு முன்னேறியது.

இந்தியாவின் சானியா மிர்சா-சிம்பாப்வேயின் காரா பிளாக் ஜோடி, நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் சுவிட்சர்லாந்தின் மார்ட்டினா ஹிங்கிஸ்-பெலிண்டா பென்சிக் ஜோடியை எதிர்கொண்டது.

தொடக்கம் முதலே ஆட்டத்தை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்த சானியா-காரா பிளாக் ஜோடி, 62 நிமிடங்களில் 6-4, 6-2 என்ற நேர்செட்களில் வெற்றி பெற்றது.

அரையிறுதியில் இவர்கள் ஜெலினா ஜான்கோவிக் (செர்பியா)-அரந்த்சா பாரா ஜோடியை எதிர்கொள்கின்றனர்.

டோக்கியோ போட்டி முடிந்ததும், ஆசிய விளையாட்டில் கலந்து கொள்வதற்காக சானியா மிர்சா, தென்கொரியாவின் இஞ்சியோன் நகருக்கு செல்கிறார்.

# மஹேலவுக்கு கௌரவம்



இலங்கை அணியின் நட்சத்திர வீரர் மஹேல ஜெயவர்தனவை கௌரவிக்கும் விழாவொன்று கொழும்பில் உள்ள பிரபல ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சி கொழும்பில் உள்ள ஒரு கல்லூரியின் பழைய மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் இலங்கை அணியின்நட்சத திர துடுப்பாட்ட வீரரும், முன்னாள் அணித்தலைவருமான குமார் சங்கக்காரா கலந்து கொண்டிருந்ததுடன் அங்கு விஷேட உரையையும் நிகழ்த்தினார்.

மேலும் முன்னாள் இலங்கை அணியின் தலைவரும் தபால் துறை பிரதியமைச்சருமான சனத் ஜெயசூரியா கலந்து கொண்டு மஹேல ஜெயவரதனவை கௌரவிக்கும் வகையில் நினைவு முத்திரை ஒன்றையும் வெளியிட்டு வைத்தார்.







உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு புங்குடுதீவு தபாலக சமூகத்தினரால் மேற்கொள்ளப்பட்ட வியாபார மேம்படுத்தல் நிகழ்வில் வடமாகாண பிரதித் தபால்மா அதிபர் என்.ரட்ணசிங்கம் மாணவி ஒருவருக்கு அஞ்சல் அறிமுக அட்டை வழங்குவதையும் அருகில் தபால் அதிபர் ரி.சுமித்தராவதி நிற்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் புங்குடுதீவு தபால் அதிபர் என்.கமலதாசன் வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து வைப்புப் பணத்தை பெற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியதிச் சட்ட...

கைதடியில் அமைந்துள்ள வட மாகாண சபை கட்டிடத்தொகுதி க்கு நேற்று காலை வருகை தந்த வட மாகாண ஆளுநரின் செய லாளர் எல்.இளங்கோவன் இவற்றை தங்க ளிடம் ஒப்படைத்ததாக அவைத் தலைவர் தெரி வித்தார்.

மேற்படி இரண்டு நியதிச் சட்டங்களும் அங்கீகரிக்கப்பட்டு தங்களிடம் ஒப்படைக்க ப்பட்டதை தொடர்ந்து, அது தொடர்பான சட் டத்தை அமுலாக்கும் நடவடிக்கையில் ஈடுபவு ள்ளதாக அவைத்தலைவர் மேலும் தெரிவித்தார்.

வட மாகாண சபையால் நிதி நியதிச் சட் டம், முத்திரை வரிகை மாற்றல் நியதிச்சட் டம் மற்றும் முதலமைச்சர் நிதி நியதிச்சட்டம் ஆகிய உருவாக்கப்பட்டன.

உருவாக்கப்பட்ட மூன்று நியதி சட்டங்க ளும் ஆளுநரின் சிபாரிசு பெறும் பொருட்டு, வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திர சிறிக்கு வட மாகாண சபை அனுப்பி வைத்தது.

இதில் முதலமைச்சர் நிதி நியதிச்சட்டம் 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் சென்று தயாரிக்கப்பட்டுள்ளதாக கூறி ஆளுநர் அதனை ஏற்கமறுத்ததுடன், சட்டவல்லுநர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டு, தொடர்ந்து ஜனா திபதிக்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

ஜனாதிபதி அதனை பரிசீலனை செய்து உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி, நீதிமன்ற த்தினூடாக தீர்மானம் எடுக்கப்படும் என கூறினார்.

அடுத்ததாக முத்திரைவரி கைமாற்றல் நிய திச்சட்டத்தில் சில மாற்றங்கள் செய்ய வேண் டும் என்று ஆளுநர் கேட்டுக்கொண்டதிற்கிண ங்க வட மாகாண சபையினர் சில மாற்றங் களை செய்ததையடுத்து, அதனை ஆளுநர் ஏற்றுக்கொள்வதாக உறுதியளித்தார்.

இருந்தும், நிதி நியதிச்சட்டத்தில் பல சரத் துக்கள் சட்ட எல்லையை மீறியும், மத்திய அரசாங்கத்திலுடைய உரித்துக்களை பற்றி கூறுவதாகவும் இருப்பதாகவும், அதனை நீக்கி திருத்தங்கள் செய்யும்படி ஆலோசனை கூறி ஏற்கமறுத்து வட மாகாண ஆளுநர்வடமாகாண சபையினருக்கு திருப்பி அனுப்பினார்.

இவ்வாறு இரண்டு தடவைகள் திருத்த ங்கள் மேற்கொண்டு வடமாகாண சபையினர் ஆளுநரிடம் சமர்ப்பித்திருந்த போதும், தான் எதிர்பார்த்த திருத்தங்கள் இடம்பெறவில்லை யென ஆளுநர் ஏற்கமறுத்தார்.

தொடர்ந்து கடந்த 10 ஆம் திகதி திருத் தங்கள் செய்து அனுப்பப்பட்டதை நிதி நியதிச் சட்டத்தை ஆளுநர் ஏற்றுக்கொண்டு, அங்கீ கரிக்கப்பட்ட நியதிச்சட்டங்களை நேற்று வியாழக்கிழமை வடமாகாண சபையின ரிடம் கையளித்துள்ளார். (செ-11)

## ஜொனி மிதிவெடி...

விடுதலைப் புலிகளின் ஜொனி ரக மிதி வெடிகளே இவ்வாறு மீட்கப்பட்டதாக தெரி விக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவ தாவது,

நேற்றுமுன்தினம் அரச சார்பற்ற நிறுவன மொன்று காணி ஒன்றை தோட்டச் செய்கை க்குக் கையளிப்பதற்காக துப்பரவுப் பணியில் ஈடுபட்டிருந்தது.

இந்த நிலையில், பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடிகளைக் கண்ட தும், உடனடியாக பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

இதனையடுத்து, அங்கு விரைந்த பொலி ஸார், அப்பகுதிக்கு பாதுகாப்பு வழங்கினர்.

அப்பகுதிக்கு வந்த விசேட அதிரடிப்படையினர் அந்த மிதிவெடிகளை மீட்டு அவற்றை வெடிக்க வைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.(எ-2, 250)

## மாபெரும்...

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன் றியத்தினால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மருதானையில் அமைந்துள்ள சனசமூக மத்திய நடுநிலையத்தில் ஏற்பாடு செய்யப்ப ட்டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றி யத்தின் ஏற்பாட்டாளர் நஜத் இந்திக்க மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வெளிநாட்டு மாணவர்களுக்கு கல்வியை விற்றல், மாணவர்கள் மீதான வகுப்பு தடை, மரண அச்சுறுத்தல், புலமைப் பரிசு தொகை அதிகரிப்பு, உள்ளிட்ட மாணவர்களின் பிர ச்சினைகள் தொடர்பில் கடந்த காலங்களில் நாம் பல்வேறு கலந்துரையாடல்களையும் போராட்டங்களையும் முன்னெடுத்த போதி லும் எமது பிரச்சினைகள் தொடர்பிலும் எமது கோரிக்கைகள் தொடர்பிலும் அரசும் சரி உயர் கல்வியமைச்சும் சரி எந்த தீர்வையும் முன் வைக்கவில்லை.

நாட்டின் உன்னத தலைவர்களின் அர்ப் பணிப்பு செயற்பாடு மூலம் பெறப்பட்ட இலவச கல்வியையும் பல்கலைக்கழக கல்வியை யும் முற்றாக இல்லாமல் ஒழித்து தனியார் துறைக்கு விற்கும் செயற்பாடுகளையே இந்த அரசு மேற்கொண்டு வருகின்றது.

உலகத்தில் ஏனைய நாடுகள் இலவச கல்வியை நடை முறைப்படுத்தி நாட்டில் படிப்பறிவு மற்றும் எழுத்தறிவு வீதங்களை அதிகரிப்பதன் மூலம் கல்வி மட்டத்தை நாட் டில் உயர்த்தவே முயற்சிக்கின்றது. எமது நாட் டில் மாத்திரமே இலவச கல்வியை இல்லா மல் ஒழிக்கும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றது எனத் தெரிவித்தார். (எ-11)

## இராணுவ...

கம் முன்னிலையில் விவசாயிகளிடம் இந்த நிலங்களை ஒப்படைத்தார்.

இதனையடுத்து, நேற்று வியாழக்கிழமை காலை 10 மணியளவில், பூஜையை மேற் கொண்ட விவசாயிகள், நிலத்தை பண்படுத்தி சிறு நிலப்பரப்பில் நெல் பயிரிடும் நடவடிக்கை யில் ஈடுபட்டனர். தொடர்ந்து, முழு விவசாய நிலங்களையும் பண்படுத்தி விவசாய செய்கை யில் ஈடுபடுவதற்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

இதேவேளை, இந்த நிலப்பரப்பில் விவசா யம் மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு, கம நல சேவைகள் திணைக்களத்தின் ஊடாக, மானிய உரம் மற்றும் விதை நெல் ஆகியவற்றை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் உறுதியளித்தார். (எ-15,267)

## சீன வர்த்தகர்கள்...

28 மற்றும் 35 வயதான இந்த சந்தேக நபர் கள் ஷங்காய் நகரை சேர்ந்த ஷம்பு உற்பத்தி செய் யும் வியாபாரிகள் என தெரிய வந்துள்ளது.

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் சேவைக்கு சொந்தமான யு.எல்.846 இலக்க விமானத்தில இவர்கள் ஷங்காய் செல்வதற்காக கட்டுநாய க்க விமான நிலையத்திற்கு சென்றுள்ளனர்.

இதன்போது சுங்க அதிகாரிகளுக்கு ஏற் பட்ட சந்தேகத்தை அடுத்து, அவர்களின் பயண பொதியை அதிகாரிகள் சோதனையிட்ட போது இந்த வல்லப்பட்டை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் தமக்கு சொந்தமான ஷம்பு தயா ரிப்பு நிறுவனம் இருப்பதாகவும் அதற்கு பயன் படுத்துவதற்காக இந்த வல்லப்பட்டையை எடு த்துச் செல்வதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

சந்தேக நபர்கள் கடந்த 6 ஆம் திகதி சீனா வில் இருந்து இலங்கை வந்துள்ளனர்.(எ-11)

## மூன்று பெண்களைக்...

மாட்டின் கடிக்கு இலக்கான மூவரும் பெண் கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தில் திருமதி வரதராசா சுசீலா (வயது 60), திருமதி பேரானந்தம் பொன்னுக் கிளி மற்றும் ஒருவருமே காயமடைந்துள்ளனர். அந்த மாடு ஒருவருக்கு முகத்திலும் மற்றைய வர்களிற்கு கை கால்களிலும் கடித்துள்ளது. அத்துடன் அவர்கள் அணிந்திருந்த ஆடை களையும் கடித்து கிழித்துள்ளது.

சம்பவம் பற்றி கரைதுறைப்பற்று பிரதேச சபையினர் அறிந்தவுடன் குறித்த மாட்டினைப் பிடிப்பதற்கு கடந்த மூன்று நாட்களாக முய ற்சித்தனர். நேற்று மாலை மேற்படி பசுவைப் பிடித்து முள்ளியவளை பிரதேச சபை அலு வலக வளாகத்தில் கட்டிவைத்துள்ள னர். (எ-267)

## கிளாலி...

மாலை மீட்கப்பட்ட தாகத் தெரிவிக்கப் பட்டது.

குறிப்பிட்ட காணி யிலுள்ள கிணற்றைத துப்புரவு செய்த வர்கள் அதற்குள் ஷெல் குண்டுகள் இருப்பதை அவதா னித்தனர். உடனடி யாக பளைப்பொலிஸ் நிலையத்துக்கு தக வல் தெரிவித்தனர்.

இதனையடுத்து, பொலிஸார் இரா ணுவத்தினரின் குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவி னருடன் சென்று 21 ஷெல்களையும் மீட்டனர். (எ-60)

## தென்னாபிரிக்க...

அமைச்சர், இந்த சந்திப்புக்காகவே திடீரென வெளிநாடு சென்றதாக நம்பிக்கையான வட் டாரங்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவசரமாக வெளிநாடு சென்றமை தொடர்பில் அரசியல் வட்டாரத்திலும் பேசப்பட்டு வருவதுடன்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அறி வுறுத்தல் மற்றும் ஆலோசனைக்கு அமை யவே அவர் வெளிநாடு சென்றுள்ளதாக தெரியவருகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளில் குறிப்பிடத்தக்களவு வாக்கு வீதத்தை ஆளும் கட்சியின் வேட் பாளருக்கு கிடைக்க செய்ய தேவையான வழி முறைகளை உருவாக்குவதே இந்த விஜயத் தின் பிரதான நோக்கம் எனக் கூறப்படுகிறது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண தென்னாபிரிக்காவின் அனுபவ ங்களை பகிர்ந்து கொள்ளும் நோக்கில் சிறில் ரமபோசா அண்மையில் இலங்கைக்கு வந்து சென்றார்.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேகப் ஜூமாவிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த கோரிக்கைக்கு அமைய ரமபோசாவின் விஜயம் அமைந்தது.

அதேவேளை நாடு கடந்த தமிழீழ அர சாங்கத்தின் பிரதமர் விஸ்வநாதன் உருத் திரகுமாரனுடன் தென்னாபிரிக்க உப ஜனா திபதிக்கு நெருக்கமான தொடர்பு இருப்பதாக அறிய கிடைத்துள்ளது.

ஈழ யுத்தம் நடைபெற்ற காலத்தில் விடு தலைப் புலிகள் அமைப்புக்கு தென்னாபிரி க்க அரசாங்கம் கொள்கை ரீதியான் ஆதரவை வழங்கியது.

அந்நாட்டின் இந்த கொள்கை ரீதியான ஆதரவின் பின்னணியில் இருந்தவர், அப் போது ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் நாடா ளுமன்ற உறுப்பினராக இருந்த சிறில் ரம போசா என அரசியல் துறையில் பேசப்பட்டது.

இதனடிப்படையிலேயே ராஜபக்ஷவினர், வடக்கு வாழ் தமிழ் மக்களின் வாக்குகளை கவர ரமபோசாவின் உதவியை நாடியிருப் பதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## பா.ஜ.க...

என்று தமிழகத்தில் எதிர்ப்பும், கொந்தளிப்பும் ஏற் பட்டதால், அதில் பங்கேற்க இருந்த இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கலந்து கொள்ளா மல் தவிர்த்துக் கொண்டார் இந் நிலையில் மாநாட்டில் பங்கேற்காமல் உடன டியாக அவர்களை இந்தியாவுக்குத் திரும்ப அழைக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

ராஜபக்ஷ உலகத்தின் கண்களில் மண் ணைத் தூவ நடத்துகின்ற ஒரு அரசியல் மா நாட்டில் பாரதிய ஜனதா கட்சி பங்கேற்பதற்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வனமையான கண்டனத்தைத் தெரி விக்கின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.(எ-11)


யாழ், பேராதனை
பல்கலைக்கழகங்களுக்கான
BA-I, BA (Final) Economics N.தயாபரன்
ஆரம்பம் 20.09.2014
NJT பலாலி வீதி, இலுப்பையடி சந்தி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:-0772965817
(7729)






சிங்கப்பூரில் படிக்க பகுதிநேரமாக
1 1/2 இலட்சம் உழைக்க
அரிய சந்தர்ப்பம்
சொற்ப கல்லூரிக் கட்டணத்துடன் சிங்கப்பூர்
Entrepreneur Training Tech Academy இல்
உணவு தயாரித்தல் Hotel பயிற்சிநெறி
படித்துக் கொண்டே பகுதிநேரமாக 1 1/2
இலட்சம் கையில். சான்றிதழ் சர்வதேச
அங்கீகாரம். 3 வாரத்தில் பறக்கலாம்.
6 பேருக்கு மட்டுமே அரியவாய்ப்பு.
(7628)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
அரச பதிவு-PV82703
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.